ஞாயிறு வெளியீடு | ஆண்டு சந்தா ரூ. 5 | தனிப்பிரதி 0—1—3 | REGD. No. M. 4642

# திராவிடநாடு

மலர் 4 | காஞ்சிபுரம் 17-2-1946 | இதழ் 44

# வேலை, போச்சு!

—(சௌமியன்)—

அவர் எழுதிக்கொடுத்தார், விசாலாட்சி விவாகம், என்று.

நான், விசாலாட்சி விவாதம் என்று அச்சுக்கோர்த்தேன்! தூக்க வேளை, கொஞ்சம் துக்கமுங்கூடத் தான். எனவே, தவறுமேல்தவருகி விட்டது.

சாமி காவடியானந்தர், என்று தெளிவாகத்தான் அவர் எழுதினர், நானே அதை,

காமி சாவடியானந்தர் என்று பிழையுடன் அச்சிட்டேன். அது போலவே,

காசுமாலை
காமாலை

*

மணி அரசு
பிணி அரசு

*

விசாலம்
விசாரம்

*

வேதம்
பேதம்

*

மோய்
போய்

*

என்று பலபிழைகள் ஏற்பட்டு விட்டன, என் அஜாக்ரதையினுல். தண்டு விஷயந்தான் இவ்வளவுக்குப். அதிலும், எங்கள் ஆசிரியர்மணி மணியாக எழுதுவார்—அதாவது எழுத்துக், கோர்வையாக, அச்சுப் போலவே இருக்கும். விஷயம், இருக்கட்டும், அதுதானு முக்கியம்! அவருக்குப், பக்கம் பக்கமாக எழுத வேண்டிய வேலைகிடையாது. சுருங்கக்கூறுவதே சூட்சமம் என்பது அவருடைய இலட்சியம்! பத்திரிகையின் பக்கங்கள், பேனுவின்தயவினுலே அல்ல, காரியாலயக்கத்திரிக்கோலின் கருணையால், அழகாக இருக்கும்.

"தம்பீ! இது ஒருபிரபல திருமணம். அழகாக அச்சிட்டு, இந்த விலாசத்துக்கு ஐம்பது பிரதிகள் அனுப்பிவைக்கவேண்டும், தெரிகிறதா" என்றுகூறித் தாளைக்கொடுத்தார், நாளை மறுநாள் வருகிறேன் என்று துணை ஆசிரியருக்குக் கூறினுர், துரிதமாக வெளியே சென்றுர். தீபாராதனைக்குக்கற்பூரம் சரியாகக்கிடைக்காது கஷ்டப்பட்ட பக்தர்களின் தூதுக் கோஷ்டி, அன்று கலெக்டர் பிரவுன்துரையைக்காணப்புறப்பட்டது. அவர், ஒரு கிராம வைத்தியசாலைத் திறப்பு விழாவுக்குச் சென்றிருந்தார், அந்தக் கிராமத்துக்குக் கிளம்பிற்று தூதுக்கோஷ்டி. எங்கள் ஆசிரியர், அந்தத் தூதுக்கோஷ்டிக்குத் தலைவர்! பெயரும் பொருத்தந்தான். அனுமந்தராவ்! அவருடைய திருநாமம்! சிலசமயம் வீட்டிலே அவர் சிரமப்படுவதுண்டு, தன் மனைவியைப்பெயரிட்டு அழைக்க. அம்மையாருக்குச், சீதாலட்சுமி என்ற பெயர் இருந்தது!! ஆமாம், இவ்வளவுகூறின நான, பத்திரிகையின் பெயரைக் கூறவில்லையே; பாருங்கள் அவ்வளவு மறதி எனக்கு! "வியாசர்" எங்கள் பத்திரிகையின் பெயர்.

"வியாசர்" பத்திரிகை ஆசிரியர் அனுமந்தராவ், தன் பாரியை சீதாலட்சுமியிடம் விடை பெற்றுக் கொண்டு, துணை ஆசிரியர் கருடாழ்வார் முதலியாரை நிர்வாகத்தைக் கவனிக்கும் பொறுப்பிலமர்த்தியதும், கிண்டிக்குதிரைப் பந்தயத்திலே அந்தக்கிழமை ஓடும், அசுவ இலட்சண விளக்கப்புத்தகத்திலே அவர் ஈடுபட்டு, ஆசிரியர் தந்தசெய்தியை நான் அவசரத்திலே, அச்சுப் பிழையுடன் செய்து கொடுத்த போது, "வண்டா! தம்பி! (என்னை எல்லோரும் தம்பி, தம்பி, என்று கூப்பிடுகிறார்களே இவன் சிறுபயலோ என்று சந்தேகிக்காதீர்கள். எனக்கு வயது 40. என் பெயர் தம்பிமுதலியார்!) சரியாகத்தானே செய்தாய்?" என்று கேட்டுவிட்டு, ஒருமுறைஒப்புக்குஅதைப்பார்த்து "சரி, போடு!" என்றுர். மெஷின், அந்த அபத்தத்தைஏற்கமறுக்குமா என்ன! அச்சுப் பிழைமட்டுமா, அதுஎவ்வளவோ, கருத்துக்கோளாறுகளைத் தாங்கித்தாங்கி, உரம் பெற்றதாயிற்றே; அது மள மள வென்று, அடித்துத்தள்ளிவிட்டது. பொழுது பல பலவென விடிந்ததும், பத்திரிகையைப் பார்சல்செய்யும்வேலை மடமடவென்றுநடந்தது.

இரண்டாம்நாள் இரவு, தட தட வென்று கதவைத்தட்டினுன் ஆபீஸ் பையன். திறந்தேன், திடுக்கிட்டேன்; அவசர அழைப்பு ஆசிரியரிடமிருந்து. ஓடினேன், கிடு கிடு வென்று!

"தம்பீ! தலையிலே கல்போட்டாயே!" என்றுர் ஆசிரியர் அனுமந்தராவ். கருடாழ்வாரைக் காணுேம். பத்திரிகைக்குஅவர்கொடுத்ததாளை எடுத்துவரச்சொன்னுர். கொண்டு வந்தேன், படி என்றுர், படித்தேன். அது இது.

### பிரபல திருமணம்

பலசரக்குக்கடையின்றிப்பிரபஞ்சம் நிலைக்குமா? முடியாது! நமது ஊரிலே, பலசரக்குக்கடைகள் பல இருந்தாலும், பண்டரி விலாஸ் கடைக்கு ஈடாகுமா? ஆகாது! அந்தக்கடைக்கு முடிசூடா மன்னராக விளங்கும், முகுந்தராஜமுதலியாரின் மூத்தகுமாரி, சௌபாக்யவதிவிசாலாட்சி அம்மாளின் விவாகம், விமரிசையாக இன்றுகாலை நடைபெற்றது. மணமகன் மணிஅரசுமுதலியார், ஜெகஜோதியானவைரக்கடுக்கன்கள் அணிந்து காட்சி அளித்தார். ஸ்ரீமதி விசாலம் புதிய காசுமாலையுடன் காட்சிதந்தது கண்கொள்ளாக்காட்சியாகஇருந்தது. ஸ்ரீமான் முதலியாரின், வைதிக சிரத்தையை அறிந்த பிராமண சிரேஷ்டர்கள், காலையிலே, வேதம் ஓதினர்! இது புதிய முறையல்ல. பழைய ராஜாக்கள் காலத்திலே இதுவே சம்பிரதாயம்! மாங்கல்யதாரணம், முதலிய சர்வ சாஸ்திரோக்தக் காரியங்களும் இனிது நிறைவேறியபிறகு, உள்ளூர் வெளியூர்ச் சீமான்கள், மொய் எழுதினர். மாலையிலே அருமையான சங்கீதக்கச்சேரி நடைபெற்றது. ஆனால் ஒருவிஷயம் இங்குகுறிப்பிட வேண்டி இருக்கிறது. சங்கீதம் சாஸ்திரோக்தமாக இல்லை, அதுஎன்னமோ தமிழ்இசைஎன்றுசிலர்கூறுகிருர்களே, அதுவாம் அது. ஊர்வலம் நடைபெற்றது. ஊரெங்கும் இதே பேச்சு, இவ்வளவுக்கும் சிகரம் வைத்ததுபோல இருந்தது, காலையும் மாலையும் கலியாணத்துக்குச் சாமி காவடியானந்தர்விஜயம்செய்தது. அவர்நமது ஆசிரியர் அனுமந்தராவிடம் அன்யோன்யமாகப் பேசியதகண்டு, "கற்றாரைக் கற்றாரே காமுறுவர்" என்றபலர்கூறினர். முகஸ்துதியில் பிரியமில்லாத நமது ஆசிரியர், அந்தப்புகழுரையைக்கேட்டும்கேட்காதவர் போலிருந்தது, குறிப்பிடத்தக்கது.

இதுதான் ஆசிரியர் தந்தது. இதிலேதான், விசாலம்விசாரமாகி, விவாகம் விவாதமாகி, சாமிகாவடியானந்தர் காமி சாவடியானந்தராகி, காசுமாலைகாமாலையாகி, மணிஅரசு பிணிஅரசாகி, வேதம்பேதம் என்றுகி, மொய்போய் என்றுகி வெளிவந்தது. எல்லாம் அச்சுப் பிழைதான், ஆனல்ஆசிரியர் அனுமந்தராவ், "தம்பீ! என்வாழ்க்கையையே வதைத்துவிட்டாய்" என்று போட்டகூச்சல், உண்மையாகவே, நான் செய்தபிழை மிகமிகக்கொடுமையானது என்று உணர்த்திற்று. உரத்தகுரலிலேகூறிவிட்டார். "உன் கணக்குத் தீர்த்தாகி விட்டது. வேலைக்கு வேண்டாம்இனி, போ வெளியே" என்றுர். வெளியேசென்றேன், வேறென்ன செய்யமுடியும்! ஒருதண்டு விஷயத்தை இவ்வளவு பிழைகளுடன் வெளியிட்டால், அச்சுக் கோர்ப்பவனுக்கு அச்சகத்திலே, அலுவல் கிடைக்கத்தான் செய்யாது. என்னசெய்வது! ஏக்கம்கொண்டேன் தூக்கம்வரவில்லை. போக்கிடமின்றித்தவித்தேன்.

வேலைஇல்லை என்ற உடனே வேலாத்தா—என்மனைவிக்குக் குல தெய்வத்தின் பெயரையே வைத்து விட்டார்கள்—கொண்ட கோபம் இருக்கிறதே, இவ்வளவு அவ்வளவு என்று சொல்லி முடியாது. "ஒரு நாளைக்கு, ஒருவேளை, சோத்திலே, தப்பித்தவறி ஒரு கல் இருந்து விட்டா, என்னுகோபம்வருது உங்களுக்கு. இத்தனைகாலமா அச்சாபீசு வேலையிலே இருக்கறிங்க, இவ்வளவு தப்புச்செய்யறிங்க. எவன் கொடுப்பான்வேலை?" என்றுபேசினுள். பேசினுள் என்று ஒப்புக்குச் சொல்றேன், அவபோட்ட கூச்சல் இருக்கே, வேலாத்தாளே(குல தெய்வம்) வந்தது போலிருந்தது. என்னுல்வேதனையைத்தாங்கமுடியவில்லை. சே! குடும்பமும் வேண்டாம், இந்தக்குத்தல்குடைச்சலும் வேண்டாம். பேசாமே சன்யாசி ஆகிவிட வேண்டியதுதான் என்று தீர்மானித்து, வேகமாக வீட்டை விட்டு வெளியேறினேன். நடந்து கொண்டே யோசித்தேன். வேலாத்தாபோல, ஊரிலே எத்தனையோ அம்மணிகள் இருப்பார்களே, அவர்களிடந்தானே போய் பிச்சைகேட்கணும், 'தடியனுட்டம் இருந்துகொண்டு, பிச்சை எடுக்க வந்துவிட்டயா!" என்று ஏசுவார்களே, என்றபயம் பிறந்தது. சரி, நிஜமாகவே சன்யாசி ஆகவேண்டியதில்லை, ஒரு நாளைக்காவது, வீட்டுக்குப் போகாமலிருப்போம், வேலாத்தா "என்னமோ ஏதோ" என்று அழட்டும் என்று எண்ணினேன். எங்கெங்கோ சுற்றிவிட்டு, இரவு பத்துமணிசுமாருக்கு, ஊர்க்கோடிசாவடியிலேபோய்ப்படுத்தேன், அரைத்தூக்கம். அந்தச்சமயத்திலே, "நமச்சிவாயம்!" என்று சத்தம் கேட்டது, சாவடிக்கு, சாமி காவடியானந்தர் வந்தார். நான் படுத்திருந்த மூலையிலிருந்து எழுந்திருக்கவுமில்லை, பேச்சுக்குரலும் கொடுக்கவில்லை நல்லவேளையாக அவர் என்னைப்பார்க்கவில்லை. பார்த்துவிட்டால் என்ன செய்வது என்றதிகில்எனக்கு. 'அடேபயலே! நீதானே, என்னை, காமிசாவடியானந்தர் என்றுஅச்சடித்தது' என்று கேட்டு ஏதாவது மந்திரம் போட்டுவிட்டால் என்கதி என்ன ஆகும்! நானேபிள்ளைகுட்டிக்காரன்! வாய் திறவாமல் சுருட்டிப் படுத்துக் கொண்டிருந்தேன்.

"என்சாமி!" என்றுவேருெருகுரலும் கேட்டது. நான், 'சாமியார், நமசிவாயம்' என்று சொன்னதும், ஆண்டவன் பெயரைச் சொல்கிறுர் என்று நினைத்துக் கொண்டேன். அதுஒரு ஆசாமியினுடைய பெயர் என்று அப்போது தான் தெரிந்தது. அவனும் சாமியாரும் ஏதேதோ பேசிவிட்டு, அந்தக்கலியாணப் பேச்சையே ஆரம்பித்து விட்டனர், எனக்குப் "பகீர்" என்றுகிவிட்டது, சரி, நம்மைத்தான் திட்டப்போகிறுர்கள் என்றுநினைப்பிலே, அதற்குத் தகுந்தாப்போல, "யாரு சாமி! பேப்பரிலே, எழுதினவன், தாறுமாருக!" என்று வேறுநமசிவாயம்கேட்டுத்தொலைத்தான். சாமியார் சிரித்து விட்டு, "எழுதினவன் பேரில் தவறுஇல்லை.

(அடுத்த பக்கம் பார்க்க)

## வேலை, போச்சு!

*1-ம் பக்கத் தொடர்ச்சி*

அவனிடம் இருக்கிறகம்பாசிட்டர் ஒரு குருட்டுப்பயல் போலிருக்கு, அவன் அச்சுக்கோர்த்தபோது,தப்பும் தவறுமாகச் செய்து விட்டான்" என்றார் சாமியார்."சிரிக்கிறீரே சாமி! அந்தப்பயல் செய்த காரியத்துக்கு. என்னதிரே கிடைத்தானா..........." என்றான் நமசிவாயம். ஐயோ! வேலாத்தாளின் கோபமே, பரவாயில்லையே, அடிபட்டாலும் வசவு கேட்டாலும், நம்ம மனைவிதானே என்ற சமாதானமாவது இருக்கும், இந்தப் பயல் யாரோ, வழியே போகிறவன், இவனல்லவா 'கறுவுகிறான்' என்று தோன்றிற்று. என்ன செய்வது, இடபேதம்! பேசாமல் கிடந்தேன். சாமியார்என்பக்கம்பரிந்து பேசலானார்! "அவன் செய்ததவறிலேகூட எவ்வளவோ உண்மை இருக்கிறது நமசிவாயம். உண்மையைச் சொல்லவேணுமானா, நான், காவடிகைங்கரியம் நடத்தி இந்தச் சாவடியைக்கட்டிச், சாமி காவடியானந்தர் என்று பெயரெடுத்தேன். அந்தக்கம்பாசிட்டர் கை தவறுதலாக,காமிசாவடியானந்தர் என்று அச்சடித்துவிட்டான். அது ஒன்றுதவிர, மற்றது, பெரும்பாலும், உண்மையேதான்!" என்றார். எனக்குத் தூக்கிவாரிப்போட்டது. நமசிவாயத்துக்கும் அப்படித்தானே இருந்திருக்கும். நான்பேச முடியாத நிலை. அவனுக்கென்ன பயம், பேசினான், கோபமாகவே. "வேடிக்கைபேசுகிறீர் சாமியாரே! அந்த முட்டாள், விசாலாட்சிவிவாகம், என்பதை, விவாதம் என்று அச்சடித்திருக்கிறான், அவனுக்குப் பரிந்து பேசுகிறீர்களே!" என்று கேட்டான். முட்டாளாம், நான்! என்ன செய்யலாம்! அவளும் அதையேதான் வேறே பாஷையிலே சொன்னாள். "உங்க புத்தி இருக்கே, உலக்கைக் கொழுந்து" என்று சொன்னாள்,கோபம்வந்தது எனக்கு. இவன் என்னைமுட்டாள் என்று அழுத்தந்திருத்தமாகக்கூறுகிறான், போறாதகாலம். சாமியார், "நமசிவாயம்! விவாகம் என்றுஅச்சடிப்பதைவிட, விவாதம் என்று அச்சு அடித்தது தான் பொருத்தம். ஏனென்றால், இந்தக் கலியாணம், விசாலாட்சிக்குக் கொஞ்சம் கூட இஷ்டம்கிடையாது. அவள்தாயாரிடம் இதுபற்றி விவாதித்தாள், புத்திசொல்லப்போன என்னிடங்கூட விவாதித்தாள்.ஆகவே,அவன் விவாகம் என்பதை விவாதம்என்று அச்சடித்தது, உண்மை, அவனுடைய கைதவறுதலாலே, வெளிவந்தது என்றுதான் அர்த்தம்." என்றார்."ஏன்விசாலாட்சிக்குஇஷ்டம் இல்லை? என்ற கேட்டான் நமசிவாயம். சாமியார் கேட்டார், 'மாப்பிள்ளைபெயர்என்ன?' என்று. "மணிஅரசு"என்றான் நமசியாயம். அதைத்தானே அந்தப்பயல் "பிணி அரசு"என்றுஅச்சடித்தான்என்று கேட்டார்சாமியார். அதற்காகத்தான் அந்தப் பிரகஸ்பதியைப்பாராட்டுகிறீரா?என்று நமசிவாயம்கேட்டான். சாமியார்'அவன்கைதவறி, மணிஅரசு என்பதை பிணிஅரசு என்றுஅச்சுக்கோர்த்தான்.ஆனால் தெரிந்தே அப்படிஅச்சடித்தாலும் தவறு இல்லை. ஏனென்றால் உண்மையிலேயே மாப்பிள்ளைநோயாளிதான், அவனுக்குக்காமாலைவியாதி' என்றார் சாமியார். நான் பூரித்துப் போனேன். "நோயாளியைமணம் செய்து கொள்ளும் பெண்ணின் பெயர் விசாலம் என்று இருந்தால் என்ன, அவன் தவறாக அச்சடித்தானே விசாரம் என்று, அதுதான் பொருத்தம்" என்று சாமியார் கூறினார். நமசிவாயத்தின் வாய் அடங்கிவிட்டது. எனக்கோ துடிதுடிப்பு! எழுந்து போய்ச் சாமியார் காலிலேவிழவேண்டும் என்று. அடக்கிக் கொண்டு படுத்திருந்தேன். "யோசிக்கப் போனால்அந்தக் கம்பாசிட்டர்செய்தது ஒன்று கூடத்தவறு கிடையாது. "காசுமாலைமாப்பிள்ளைபோட்டது,அவன் காமாலைக்காரன், ஆகவே காசுமாலை என்று அச்சிடாமல்,காமாலை என்று அச்சிட்டதிலே எழுத்திலே பிழையே தவிர உண்மையிலே, பிழையல்ல. வேதம் என்பதை பேதம் என்று அச்சடித்தான். வேதம் உண்மையிலேயே, ஜாதி குலம் முதலிய பேதத்தைஏற்படுத்தத் தோன்றியதே. அது மட்டுமில்லை. அன்று வேதம் ஓதினார்களே பார்ப்பனர்கள், அவர்கள் ஓதியது, சரியான வேதமல்ல, ரொம்ப ரொம்பப்பேதம்இருந்தது, அந்த அரைகுறை ஆசாமிகளின் வேதபாராயணத்திலே. மொய், எழுதினாரே, அதிலே பெரும்பகுதி பொய்தான். வெறும் கௌரவத்துக்காக, எங்கெந்த ஊரிலிருந்தோ யாராரோ, ஐம்பதும் நூறும்மொய் அனுப்பினதாகப் பொய் சொன்னார், ஆகையால், மொய்என்பதற்குப்பதில்பொய் என்றுஅச்சடித்ததும் சரியே!" என்றார் சாமியார். நமசிவாயத்தின் கோபம், என்மீது இருந்தது போய்விட்டது, முகுந்தராஜ முதலியார்மீது பாய்ந்தது. "பெண்ணை, ஒரு நோயாளிக்கா கலியாணம் செய்து கொடுத்தான் பாவம்! அந்தப்பெண் வேண்டாமென்று மறுத்துமா அதன் தலையிலே அந்தக் காமாலைக்காரனைக் கட்டிவைத்தான்" என்று நமசிவாயம் ஏசலானான். "இப்படிப் பட்ட தவறுகள் நடைபெறுவதை, அனுமதிக்கிறோம், ஆசிர்வாதம் செய்கிறோம், அவர் இஷ்டம் என்று கூறுகிறோம். அதனதன் விதிஎன்று கூறுகிறோம். இரண்டு பேருடைய வாழ்க்கையை அந்தஒரு ஆசாமிதன் இஷ்டத்துக்கு ஏற்றபடி வளைத்து விட்டான். அதைத் திருத்தவும்முடியாது, கண்டிப்பதும் கூடாது. பாவம்! அந்தக்கம்பாசிட்டர், என்னமோகைதவறித்தப்பாக அச்சுக் கோர்த்து விட்டான், அவனை நான் மடையன், குருடன் என்றெல்லாம் திட்டினேன். விஷயத்தைப் பார்க்கப்போனால் அவன் கைக்குத் தங்கத் தோடா அல்லவா போடணும் போலஇருக்கு" என்று கூறினான் நமசிவாயம். எனக்கு ஆனந்தம்! அவன் தங்கத்தோடா கூடப் போடத் தேவையில்லை, அவன் சொன்னவார்த்தை,வைரத்தோடா போலே இருந்தது, என் மனது குளிர்ந்தது. பிறகு, வேறுஏதோ தேவாரம் திருவாசகம் முதலியசத்விஷயங்களைப் பேசிவிட்டு, நமசிவாயம் விடைபெற்றுக் கொண்டு போனான். எனக்கு, இனியாவது எழுந்திருந்துபோய்ச்சாமிகாலிலே விழுந்து கும்பிடுவோமா என்ற எண்ணம் உண்டாயிற்று, ஆனால் ஒருபயம் இருந்தது. நான் செய்த எல்லாத்தவறுகளுக்கும்சாமியாரே சமாதானம் சொல்லி விட்டார்; ஆனால் நானோ சாமியாரையே, காமி சாவடியானந்தர் என்றல்லவா....................

காமி சாவடியானந்தருக்கும் தூக்கம் வரவில்லை. படுத்துக் கொண்டே பாடிக்கொண்டிருந்தார். பனிரண்டுமணி சுமாருக்கு, யாரோவரும் சத்தம்!

ஏதுபாட்டு, பலேஜோரா இருக்குதே" என்று ஒருகுரல்கேட்டது. திடுக்கிட்டுப்போனேன். பெண் குரல்! பேசியது பச்சை!எனக்குத் தெரிந்தவள்!! பலசரக்குக் கடையைக்கூட்டிமெழுகிச் சுத்தம் செய்பவள். அவள்வருகிறாள்,சாவடிக்கு நடுநிசியில்! காமி சாவடியானந்தனேதான் இவன்! இதிலேகூட நான்அச்சடித்ததிலேஎன்னதவறு? செச்சே! அதற்குமேலே, அங்கே நடந்தபேச்சை நான் எப்படிச் சொல்ல முடியும். சாமியாராம்! காவடியானந்தராம்! காமி,சாவடியிலே ஆனந்தராக இருந்தார். தேவாரமா பாடினார்! தில்லானா பாடினார்! பச்சை, சாமியாரிடம் விபூதிப்பிரசாதமா கேட்டாள்,'எடு எடு! பணத்தை! ஏழுநாளா ஏச்சிக்கிட்டேவர்ரயே'' என்றாள்.விபூதிப் பையிலே இருந்து கல கலவென்று ரூபாயைக் கொட்டினான் அந்தக் காமி. ஐந்து ரூபாயைக் கொடுத்தான் பச்சையிடம்.

"மிச்சத்தை இப்படிப்போடு சாமி" என்று கூறிக்கொண்டே நான்போய் நின்றேன்பக்கத்திலே. அலறிப்போனான் அந்த ஆண்டி. அவளும் ஆந்தைபோலவிழித்தாள். சாமியாரை நான் பேசவிடவில்லை. 'மகாயோக்யர்போல, நான்செய்த மற்றத்தப்பெல்லாம்சரிஎன்றுநமசிவாயத்துக்குச் சொன்னயே, உன் பெயரை, சாமி காவடியானந்தர் என்றுஅச்சடிக்கணும்,காமிசாவடியானந்தர்தானே நீ" என்று கேட்டேன். ஆசாமிகைப்பிடியாகஅகப்பட்டபிறகு, பயமென்ன. பயம் போய்விடவே, புத்தியும்கொஞ்சம் தீட்சணியமாக வேலைசெய்ய ஆரம்பித்தது, "கைதவறி, மாற்றி மாற்றி அச்சடித்தேன் என்று தானே சொன்னே. தவறிச் செய்ததில்லை, சகலவிஷயமும் தெரிந்துதான் அச்சடித்தேன். மரியாதையா பணத்தைப்போடு" என்றேன்.என்னடா இது, கொள்ளை அல்லவா அடிக்கிறேன்என்று கோபமாஉங்களுக்கு. இந்தக் கூத்திக்கள்ளன் சாமியார் வேஷத்திலே அடிச்ச கொள்ளையிலே, இதுஎந்தமூலை? பணத்தைக் கொடுத்தான். விட்டேனா? "சரி' எங்க அச்சாபீஸ்காரன் உனக்குச் சிநேகிதனாச்சே, அவனிடம் எப்படியாவது சொல்லி, மறுபடியும் நம்மைவேலையிலேசேர்த்துக்கொள்ளச்சொல்லணும் தெரியுதா? என்றேன். சரி, என்றான் அழுகுரலில்.

இருட்டு, நடுநிசி, ஒருபயமும் இல்லாமல், வீட்டுக்கு நடந்தேன், அந்தஇரண்டுசனியன்களும்கொஞ்சம்தொலைவாகவேஎன்பின்னால் வந்தார்கள். வீட்டுக்குப் போனேன், வேகமாகக் கதவைத் தட்டினேன், கொஞ்சம் அதிகாரக்குரலிலேயே, "வேலாத்தா! வேல்! வேலா! டீ, வேலாத்தா!" என்றுபலரகத்திலே, பல சுருதியிலே கூப்பிட்டேன். எனக்கென்ன பயம், எட்டுரூபா இருக்கு அந்தக்கொட்டை கட்டி கொடுத்த பணம். "ஏது அதிகாரம் தெருவே தூக்குது" என்றுஅர்ச்சனை செய்துகொண்டே கதவைத் திறந்தாள்வேலாத்தா;வழக்கமாகப் பயத்தைக்காட்டும்என்கண்களிலே அதிகாரப் பார்வையைக் கண்டாள். அவளாலே கோபத்தை அடக்க முடியவில்லை. "வேலைபோச்சின்னு கொஞ்சமானு கவலை இருக்குதா உனக்கு விடிய விடிய ஊர்சுத்தி விட்டு வர்ரயே" என்றாள், "ஓ" கழுதே! வேலை போச்சாம் வேலை! வேலேன்னு சொல்லுடி! நமக்கு இருந்த போறாத வேளை போச்சுன்னு சொல்லு" என்று கூறிக் கொண்டேஎட்டுரூபாயைக்கொட்டினேன்! அவள் பார்த்த பார்வை இருக்கே, என்னவென்று சொல்வேன்! 'நாளைக்கு வேலைக்கும்போவேண்டி!" என்றேன். ஏன்? எப்படி? ஏது? என்று அவள் எத்தனையோதடவைகேட்டாள்:ரொம்ப காலத்துக்கு முன்னாலே கொஞ்சுவாளே, "ராசா இல்லை! கண்ணு இல்லை!" என்று, அந்தபழையது கூடப்போட்டாள். கடைசியில், பூரா விஷயமும் சொன்னேன். அவளுக்கு வந்த சந்தோஷத்திலே—வெட்கமாகக்கூடஇருக்கு சொல்ல—குமரிபோலே — என்னையும் புது மாப்பிள்ளைக் கோலத்திலே இருப்பதுபோலவே—எண்ணிக்கொண்டு "அடஎன் ராசா!" என்று சொல்லி ........................ஒரு முத்தம்கூடக் கொடுத்தாள்!!

## பாகவதர்-கிருஷ்ணன் சென்டரல் கமிட்டி
## வேண்டுகோள்

1946ஆம் ஜனவரி மீ 20உ சென்னையில் கூடிய சர்வகட்சிப் பொதுக்கூட்டத்தில், மே. த. கவர்னரிடம் கருணைமனுச் சமர்ப்பிக்கவும், பிரிவிகவுன்சில் அப்பீலை, வேறு எவர் முயற்சியையும் எதிர்பாராது, பொதுமக்களே நடத்துவதென நிறைவேறியுள்ள தீர்மானங்களை உடனடியாகச்செய்வதற்கும் அதிதீவிரமுயற்சிகள் நடைபெறுகின்றன. இங்கிலாந்துக்குப் பொதுமக்களின் சார்பாக இரண்டு தக்க வழக்கறிஞர்களைப் பிப்ரவரி இறுதிக்குள் அனுப்பவும் ஏற்பாடாகியிருக்கின்றது. எனவே, வெளியூர்களில் இதற்கென நிதி திரட்டிய எல்லாச் சங்கங்களும், பொதுமக்களும், அபிமானிகளும், விஸ்வகர்ம சமூக சங்கங்களும் தக்க பொருளுதவி உடனே புரியுமாறு வேண்டப்படுகின்றனர். சினிமா தியேட்டர்கட்கும், பிலிம்கம்பெனிகட்கும், நாடகசாலைகட்கும் இதுகுறித்துத் தென் இந்திய பிலிம்போர்டு சேம்பரின் தலைவர் தனி அறிக்கை வெளியிடுவார். ஆகையால் பணம் அனுப்புவோர் கீழ்க்கண்ட விலாசத்திற்கு அனுப்புக.

காரியதரிசிகள்,
**பாகவதர்—கிருஷ்ணன் சென்டரல் கமிட்டி,**
29-A. திருவேங்கட முதலி தெரு,
பார்க் டவுன், சென்னை.

## இயக்க வெளியீடுகள்

எங்களிடம் நமதியக்கப்புத்தகங்களும், தலைவர்கள் போட்டோக்களும், அட்டைப்படங்களும், தலைவர், கவிஞர்படங்களமைந்தகார்டு, கவர், லெட்டர் பேடுகளும்,"திராவிடநாடு திராவிடருக்கே'' கைக்குட்டைகளும், சி.என். ஏ. அவர்களின்'நாடும்ஏடும்','திராவிடர் நிலை', 'மறுமலர்ச்சி','நல்லதீர்ப்பு' முதலிய புத்தகங்களும், திராவிடர்கழககாட் குறிப்பும் மொத்தமாகவும்சில்லரையாகவும் கிடைக்கும். வியாபாரிகட்கு தகுந்த கமிஷன்உண்டு.

விலாசம்:—

**செலக்ட் புக்ஸ்டால்,**
142, கச்சேரி வீதி,
**ஈரோடு.**

# காமவேள் நடனசாலையில் கற்பூரக்கடை

:(o):

## புராணப் பிரசாரத்தின் விளைவு என்ன?

## பூசுர அரசு! புலவர் முரசு!

○—[பரதன்]—○

பூவையரைப்பூரிப்புடன் புகழ்வதிலே புராணம், முதலிடம் பெற்று விளங்குகிறது! சாதுசன்யாசிகள் பட்டியிலே வந்தவர்கள் வேண்டுமானால்,தேகத்தின்நிலையாமையைப் பற்றியும், அதன் ஆபாசத்தைப் பற்றியும்,

காகமோடு கழுகலகை நாய்நரிகள்
சுற்று சோறிடு துருத்தி
கால்இரண்டு, நவவாசல்பெற்றுவளர்
காமவேள் நடனசாலை
மோக ஆசைமுறியிட்ட பெட்டி
மும்மலமிகுந்து ஒழுகு கேணி

என்று பாடியிருப்பர். ஆனால் இந்த நிலையல்லாத, ஆபாசமிகுந்த தேகத்தைப்பற்றி, அதிலும் தையலரின் தேகத்தைப்பற்றிப் பாடத் தொடங்கினாலோ, பக்திப்பாசுரக்காரரும்,பாராயணநூல் கோர்த்தவரும், பரமன் அருள்பெற்றவரும், அங்கம் ஒவ்வொன்றும் அழகுற அகக்கண்முன் நிறுத்தி, அளவும் தன்மையும் கண்டு, கனிமொழியினால் கூறுவதிலே, நிகர் இல்லாதிருப்பதைக்காணலாம். மும்மலக் கேணியை,வேறோர்பக்தர் வர்ணித்திடும் வகையைக் காணவேண்டுகிறோம்.

மலரணி கோண்டைச்சொருக்கிலே!
சொலுமொழியின்பச் செருக்கிலே
நிலவொளி அங்கக்குலுக்கிலே
நிறைபரிமளகோங்கைக்குடத்திலே

என்று "குளோசப்" காட்சிகளை, முதல்தரமான சினிமாடைரக்டரும்பொறாமைப்படும் அளவுக்குக் காட்டிவிட்டு,"மிஷம் இணங்கிய" செய்தியைக்கூறி, அதன்பலனை அநங்கனை, "சொப்பனத்திலே" வருவதையும்கூறிக்கடைசியில் முருகோனே! மால்மருகோனே! இதனினின்றும் என்னைக் காப்பாற்று என்றுமுடிப்பார். வெல்லுஞ்சொல், கொல்லுங்கண், வேட்கை நகை, குறுகிய நெற்றி, இருண்டகுழல், திரண்டதனம், மருட்டும்விழி,மதுர இதழ், இவைகளை அவர்கள் துதித்திருப்பதைவிட, அளவிலே, ஆறுமுகனையோ, அவரின் ஐயனையோ துதித்திருக்கும் அளவு, குறைவாகத்தான் இருக்கும்!பாயாசமுடன் விருந்துண்டானபிறகு,தெருத்திண்ணையில்உட்கார்ந்துகொண்டு,"என்னமோ, பசி அடங்கக் கொஞ்சம் சாப்பாடு! அவ்வளவுதானேவேண்டும். அந்தச்சாப்பாடுளதுவாகஇருந்தால்என்ன, கூழானாலும் கும்பி நிரம்பினால்போதும்" என்றுகூறும் குறும்பரின் செயலை நினைவிற்குக் கொண்டுவரும், புராணிகர்களின் சொல்! ஆண்டவனின் செயலைவர்ணிக்கும் இடத்திலும்பெரும்பகுதி, ஆடவர் சம்பந்தப்பட்ட சமயங்களிலே, குத்து, வெட்டு, அடி,பிடி, நசுக்கு, வெல்,கொல்,என்றசெயல்கள் செய்தாரென்றும், மாதர்சம்பந்தப்பட்ட இடங்களைக்குறிக்கும்போது, குலவு, தழுவு, கூடு, பாடு, இளகு, பழகு, விரும்பு, நெருங்கு, ஆரத்தழுவுதல், இடைசோர ஆடுதல், நிலவில் குலவுதல், புனலாடுதல், கானம் பாடுதல், என்பன போன்ற செயல்களைச் செய்தனர் என்றே பெரும்பகுதி இருக்கும். அதாவது, இயற்கையாக மக்களுக்கு எத்தகைய வர்ணனைகளைத் தந்தால் சுவை இருக்குமோஎன்று அறிந்து சித்தரிக்கப்பட்டிருக்கும்.

இதனால்தான், புராணங்களை போதை தரும் லேகியம் என்றுகூறினோம். போதை உடல் வளத்தைக் கெடுத்து உளவலுவைப்போக்குவது போன்றே, புராணமும் மக்களின் மதியை மாய்த்துவிடுகிறது. ஆகவேதான், மக்களின் மதிதுலங்க வேண்டும் என்பதிலே அக்கரை கொண்டவர்கள், இந்தப்புராண போதையை உட்கொள்ளாதீர் என்றுகூறுகின்றனர். போதையின் சுவையிலே இலயிப்போரும், அந்தப்பொருளை விற்போரும் இருப்பதுபோலவே, புராண மயக்கத்திலாழ்ந்தவரும், புராணத்தை வாணிபம் செய்பவரும் உளர். அவர்கள் ஆயாச மடைவதற்குக் காரணம் இருக்கிறதல்லவா! அவர்களின் ஆயாசத்தை எண்ணி நமது நோக்கத்தைவிட்டுவிட முடியுமா, விட்டுவிடுவது முறையாகுமா? நாமோ, சரிந்து கொண்டிருக்கும் சமுதாயத்தைச் சீராகத்திருத்தி அமைக்க விரும்புகிறோம். தாழ்நிலை அடைந்த இனத்தவர் மீண்டும் தலைதூக்கி வாழ வழிகாண விழைகிறோம். இங்ஙனம் முயற்சி செய்யாதகாரணத்தால், முன்னாளில் முடிதரித்துவாழ்ந்தஇனம் இன்று மூலையில் உலாவும் காட்டுமிராண்டிகளாகிவிட்டதைக் காணும்போது, நமதுகடமையைச் செய்தாகவேண்டும் என்ற எண்ணம் மட்டுமல்ல, அதனைத்துரிதமாகச்செய்தாக வேண்டும், துளியும் தயக்கமின்றிச்செய்தாகவேண்டும் என்ற உறுதிபலப்படுகிறது. தொதவரின் நிலைஎன்ன ஆயிற்று? சிகப்பு இந்தியர்நிலை என்னஆயிற்று? ஏன் அவர்கள் அக்கதிக்கு ஆளாயினர்? என்பதன் "சூக்ஷமத்தை" ஆராய்ந்தால், மூடிவைத்தது, கேடு தானாகப்போய்விடும் என்று இருந்தது, ஆகியவைகளே, அந்த இனங்களை அழித்துவிட்டன என்பதை உணரலாம்.

★

புராணத்திலே உள்ள கருத்துகளில்பல நாளாவட்டத்திலே, மறைந்து விடுகின்றன என்பதும், பொது அறிவு பரவப்பரவ, பல கருத்துகள், எள்ளி நகையாடப்பட்டுத், தள்ளப்பட்டு விடுகின்றன என்பதும் உண்மை. ஆனால் சில கருத்துகள், உரம் குறையாமல் உள்ளன. சிலவற்றுக்கு உரம் தருகிறார்கள். ஏன்? எத்தகையகருத்துகளுக்கு? எந்தெந்தக் கருத்துகள், ஒருசிறு கூட்டத்தின் சுகபோக வாழ்வுக்கு வழிசெய்கின்றனவோ, ஒரு கும்பல் பாடுபடாது வாழ மார்க்கமாகிறதோ அந்தக் கருத்துகள், காலவேகம், பொது அறிவு பரவுதல் என்பனவைகளால் தாக்கப்பட்டாலும், எந்தச் சிறுகூட்டம், அத்தகைய கருத்துகள் நிலவி இருப்பதால், தங்களுக்கு இலாபம் இருக்கிறதோ, அவைகளைக் கெடவிடாதபடி பார்த்துக் கொள்வதிலும், உரம்போடுவதிலும் கண்ணுங் கருத்துமாக இருக்கிறது. இங்கு அந்தச் சிறுகூட்டத்திடமே, "பிரச்சாரயந்திரம்" சிக்கிக்கொண்டிருப்பதால், தங்கள் சுகவாழ்வுக்கு உகந்த கருத்துகள் அழிந்துபடாமல் பார்த்துக் கொள்ள, அவர்கள் யந்திரத்தைப் பயன் படுத்துகிறார்கள்.

★

கம்பவுண்டர் கேசவன், டாக்டர்தாமோதரனுக்குத்தொல்லைதராமல், இதமாகப்பேசி, ஒழுங்காகவே நடந்துவந்தான். "கேசவா! கேசவா!" என்று டாக்டர் ஒரு நாளைக்கு நூறுமுறையாவது கூப்பிடுவார். அவனும் அன்பும் பணிவும் தோன்றவே நடப்பான். கேசவன், டாக்டர் தாமோதரனுக்குக் கம்பவுண்டர்தான், ஆனால் தந்தைக்கு மகனாயிற்றே! அவன் தந்தையோ, மணிமந்திர வைத்யர்! அதாவது நோய்தீர மருந்தும்தருவார்,மந்திரமும்செய்வார். டாக்டர் நாடிபார்த்து, நாக்கை நீட்டச் செய்து பரிசோதித்து, மருந்தெழுதிக் கொடுத்தானபிறகு, நோயாளி உள் அறைக்கு வந்து, சீட்டைக் காட்டியதும், கம்பவுண்டர் கேசவன் அவனைப்புன்னகையுடன் வரவேற்று உட்காரச் சொல்லிவிட்டு, மருந்து கலக்கிக்கொண்டே பேசுவான்.

"இந்த வயித்துவலி எவ்வளவு காலமாக இருக்குது, சார்"

'அதை ஏன் கேக்கிறீங்க, என்னமோ என்போருதவேளை, போன கார்த்திகையிலிருந்து இந்தக்கர்மம் என்உசிரைவாட்டுது"

"ஐயோ! பாவம்! ஆமாம், ஏன் இவ்வளவு நாளாக மருந்து சாப்பிடவில்லை?"

"சாப்பிட வில்லையா? இதுவரையிலே என் வயித்துக்குள்ளே, ஒரு கிணறுமருந்துபோயிருக்கும். டாக்டர் சேகர், டாக்டர் லோகநாதன், கெவர்மெண்டு ஆஸ்பத்திரி, எல்லாம் முடிஞ்சி, இப்போ இங்கே வந்தேன்"

"ஓஹோ! பலஇடத்திலேமருந்து சாப்பிட்டாச்சா,(ஒருவிநாடிமௌனம்) டாக்டர், என்னசெய்கிறார் என்றுகொஞ்சம்எட்டிப்பாருங்க."

(பார்த்துவிட்டு வந்து)

"பேப்பர் படிக்கிறார்"

"சார்! ஒரு விஷயம், உக்கமன சோடு போட்டுவையுங்கோ. இப்படிப்பட்ட வயித்துவலிக்கு,மருந்து சாப்பிட்டா மட்டும் போதாது; உடம்பாலொத்தது மருந்தாலே போகும். சிலது, மந்திரிச்சாதான் போகும். மகாதேவமுதலியாருக்கு இரட்சைகட்டினபிறகு தான் வலி நின்றது"

"அப்படியா? எங்கே, மந்திரிக்கிறார்கள்"

"நீங்கள் தப்பாக நினைக்கக் கூடாது. எங்கதகப்பனார்கூட, மந்திரிப்பார்"

"பெயர்!"

"மணிமந்திர அவுஷதாலயம் மன்னார் செட்டியார்"

இந்தப் பேச்சுக்குப் பிறகு, நோயாளி மணிமந்திர அவுஷதாலயம் போகிறான்! கேசவன், கம்பவுண்டாக இருந்து டாக்டருக்கு என்னபயன்?

★

இங்கு, இத்தகைய கேசவன்மார்கூட்டம் இருக்கிறது. அவர்கள் புத்துலகக் காரியாலயத்திலே கூடப் பணிபுரிவர், ஆனால்பழைமையின் ஏஜண்டாகவே மறைமுகத்தில் வேலைசெய்வர். இந்தக் கூட்டமே, புராணக் கருத்துகளிலே, தமது சுயநலக் காரியத்துக்கு ஏற்றவைகள் பழுதுபடாதபடி பார்த்துக்கொள்வது. இதன் பயனாகவே அந்தக் கருத்துகள், நாட்டுமக்களிடை இன்றும் நடமாடமுடிகின்றன. இல்லையானால், புராணகால எண்ணங்களிலே, எவ்வளவோ மாறிஇருக்க, எத்தனையையோவிட்டுக்கொடுக்க இக்கூட்டம் தயாராக இருக்க, ஒருசில கருத்துகளை மட்டும், விடாப்பிடியாகப்பற்றிக் கொண்டிருப்பானேன்? விட்டுவிட மறுப்பானேன்? உலகம் தட்டையாக இருந்தது என்ற எண்ணத்தைக்கொண்டு தான், இரணியாட்சதன், பூலோகத்தைப் பாயாகச்சுருட்டிக் கொண்டுபோய் கடலுக்குள் ஒளித்துவைத்தான்என்று புராணம் எழுதப்பட்டது. இன்று எந்தச் சாஸ்திரியாவது, புராணீகராவது, பூமி உருண்டைவடிவம் என்றுபள்ளிக்கூடங்களிலே,போதிக்கப் படுவதைக் கண்டிக்கிறார்களோ? தங்கள் வீட்டுச் சிறுவர்களையாவது, "வேண்டாமடா அந்த விநாசக்கருத்து! வேதபுராண இதிகாசாதிகள், அங்ஙனம் கூறவில்லை. அவைகளிலே கூறப்பட்ட கருத்துக்கு மாறாகச் சொல்லப்படும் பாடம், கேவலம்நாஸ்திகம்," என்று கூறித், தடுக்கிறார்களோ? "பூமி உருண்டை" என்று போதிப்பவர்களை நாஸ்திகர்களென்று நிந்திக்கிறார்களோ? வாதுக்கு அழைக்கிறார்களோ? இல்லை! விட்டுக்கொடுத்துவிட்டார்கள். பூமி, தட்டையாகவோ, உருண்டையாகவோ இருக்கட்டும், நமக்கென்னஎன்று இருந்துவிட்டார்கள், அல்லது பூமி உருண்டை தான் என்று, ஆராய்ச்சிக்காரர்கள் கூறுகிறார், ஆகவே அதை நாம் ஏற்றுக் கொள்ளத்தானே வேண்டும், என்று கூறிச்சமாதானம் பெற்றுவிடுகிறார்கள். ஏன்? இதிலே இலாபநஷ்டக் கணக்குப் பார்க்க வேண்டிய அவசியம் இல்லை? பூமி தட்டையாக இருக்கிறது என்று நம்பினால் தான்தட்சணை, உருண்டை என்று ஊரார் ஏற்றுக்கொண்டால் கிடைக்காது என்ற நிலைமைஇல்லை. சுயநலம்,இந்தக் கருத்து மாற்றத்தினால் கெடவில்லை. ஆகவே, தாராளமாகப் புதுக்கருத்தை ஏற்றுக் கொண்டு, பழையகருத்துக்குச் சீட்டுக்கொடுத்துவிடுகின்றனர். ஆனால் வேறுசில பழைய கருத்துகளைமாற்றிக்கொள்ளச் சம்மதிப்பதில்லை, சுயநலமும் அந்தப்பழையகருத்தும்ஒன்றாகஒட்டிக்கொண்டிருப்பதால்.

பூமி உருண்டை என்ற புதிய கருத்தை ஏற்றுக் கொண்டதால் பூசுரக்கூட்டம் நஷ்டம் காண்பதில்லை, ஆனால் 'தேவலோகம்,என்று ஒருதனி இடம் கிடையாது, இறந்தவர்கள் அங்கு செல்வது என்பதுப் புரட்டு, அப்படி அவர்களை அங்கே குடிஏறச் செய்வதற்காகவே, இங்கு பூதேவருக்குத் தட்சணை தரப்பட்டுச், சில சடங்குகள் செய்யப்படுகின்றன. இதுபொருள் பறிக்கும் தந்திரம், என்ற புதிய கருத்தை ஏற்றுக் கொண்டால், பழைய கருத்தைநம்பிமக்கள்தரும் பணம் கிடைப்பது நின்றுவிடும், ஆகவே நஷ்டம். எனவே, தமக்கு நஷ்டம் தரக்கூடிய புதுக்கருத்துகளை அப்பூசுரக்கூட்டம், எங்ஙனம் வரவேற்கும்? எதிர்க்கத்தானேசெய்யும். ஆயிரம் தத்துவத்தைவிடஅரை ரூபாய் தட்சணை மேல் என்றெண்ணும் கூட்டமல்லவா அது. எங்ஙனம் அந்தக்கூட்டம் சுயநலத்தை இழக்கத்துணியும். அதற்குப்பிரத்யேகமான நற்குணம்வேண்டுமே, எங்ஙனம் அதனைச்சுயநலத்தையும் சுகபோகத்தையும் பாரம்பரியமாக

(6-ம் பக்கம் பார்க்க)

# திராவிட நாடு

காஞ்சி 17—2—46 ஞாயிறு


# காமராஜர் சிந்தும் கண்ணீர்

அந்த மோகனப் புன்சிரிப்பிலே, அவரும் சொக்கினர். பத்தரைமாற்றுப் பசும்பொன் மேனியனே! ஒற்றைத் துகிலுடுத்த ஒளிவிடு வடிவழகா! பற்று அற்றவனே! பவம் அறுத்திடுவோனே!!—என்று அவர் அர்ச்சித்தார். ஒருநாள் இருநாளல்ல—ஓய்வின்றி இருபது ஆண்டுகள்!!

தொழுது நின்றவரை, தூரத்திலிருந்தநாம் அழைத்து, "பக்திப் பரவசத்திலே மெத்தவும்ஈடுபட்ட அன்பரே! நீர்தொழும்தேவன், உமக்கு அருள்பாலிக்கமாட்டானே! பூசுரரின் பாசுரமேஅந்தத்தேவனுக்குச் செந்தேன்! உன் மலரைவிட, அவர்கள் தரும்சருகு, அவருக்குஆனந்தமளிக்கும்! உன் பக்தியிலே, அவர் ஆனந்தமடைவதைவிட அவர்களின் சக்தியிலே, அவருக்கு அச்சம் அதிகமாயிற்றே! பக்தா! கால்கடுக்க அக்கோயிலை வலம்வருகிறாய். வாய் வலிக்க அந்தத் தேவனின் நாமத்தைப் பஜிக்கிறாய்! பலன் என்ன? அந்தத்தேவன், ஆரியசிருஷ்டி, ஆரிய வாழ்வுக்கு அப்பு அழுக்கு ஏற்படாதபடி பாதுகாப்புத்தேடுவதே, அந்தத்தேவனின் இலட்சியம்! அவருக்கு 'நமஸ்காரம்' தருபவர்களும், ஆரியரே! ஆகவே, ஆரிய சேவாஸ்ரமத்திலே அனுதினமும் தொழுதலும் தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்" என்று நின்றிருந்து, நாமார்க்கும் குடியல்லோம் நாதர்க்கன்றி, என்று பாடவோ, அந்தணர் என்போர் அறவோர், அஃதிலார் அந்தணராகார் என்றுகூறவோ, துணிந்தால், தேவன், துதித்துநிற்கும்உம்மையே தூக்கிக் கீழே வீசுவார். வேண்டாம் இந்த வீண் பூஜை!" என்று எச்சரித்தபோது, பக்தகாமராஜர், நம்மீது சீறி, என்தேவன் பிழை புரியான்! இவர் அவர்என்று பேதம்காட்டான். கல்லார்க்கும் கற்றவர்க்கும் களிப்பருளும் களிப்பன்றோ அவர் என்று கூறினார். தொழுகையைவிடவில்லை! தேவன், பக்தருடைய பூஜைக்கு மெச்சிப் பிரசன்னமாகி, வரம்தந்தார்! என்ன வரம்?'ஏ! வம்பர் கூட்டத்தலைவா! பிடிசாபம்!' என்றார். பக்தர், தேவன் தந்த பிரசாதத்தைப் பெற்றுக் கொண்டு, கண்ணீர்சொரிகிறார்,

"கண்ணா!" என்று கதறினேன். காதகனோ, துகிலை உரிகிறான், கணவன்மாரோ கற்சிலைகளாயினர், நானோ துடித்தேன். கூப்பிடுதூரத்திலேதான், மாவீரர்களான என் மணாளர்கள் இருந்தனர், நானோ, கண்ணனை அழைத்தேன். கண்ணீர் பெருகிற்று, ஆடையின் அளவோ குறைந்துபட்டது, நிர்வாணமாகிவிடவேண்டும் சிலநிமிடங்களில்!"—என்று புராணப்பாஞ்சாலிபேசினாலும், கடைசியில், 'மானங்காப்பாற்றப்பட்டது, மணிவண்ணன் அருளால், துகில்வளர்ந்தது. அதனை உரித்த உலுத்தன் சோர்ந்துகீழே வீழ்ந்தான். கண்ணீர் பெருகிற்று, ஆனால் களிப்புப்பொங்கிற்று, கயவனின் கண்கள் இருண்டன, சாய்ந்தான்" என்று முடிப்பார்—அதுபோல்'ஐவருக்குஒருஅம்மை'என்ற முறை படிந்த புராணம் எழுதியவனும், துகில் உரியப்படவில்லை, கடைசியில், துரௌபதையின்மானங்காப்பாற்றப்பட்டது, என்றே முடித்தான்.

"கண்ணா!" என்று கதறியதும், கண்ணன் தோன்றி, காரிகையின் கண்ணீரையும் கண்டு, "நன்று! நன்று! இந்த நீலிவேடம்! துகில் போயின் என்ன? துரௌபதே! நான் தந்த இயற்கைத்துகிலைச், சாமான்யமென்றோ கருதினாய்!" என்று கடிந்துரைத்திருப்பின், கண்ணீர்பெருகுவதுநின்றுபோய், இரத்தமன்றோ பெருகி இருக்கும், காவலர் முன் மானபங்கம் செய்வதற்காகக் கூந்தலைப் பிடித்து இழுத்து வரப்பட்ட புராண துரௌபதிக்கு.

காமராஜர், காரிகை அல்ல, துகிலும் உரியப்படவில்லை, ஆனால் மக்கள் மன்றத்திலே நின்றுகொண்டு, முறையிட்டுக்கொண்டிருந்த அந்த வீரனின், தன்மானம் ஒழிக்கப்பட்டது—காரிகையின் ஆடை மானங்காக்கத்தானே—தன்மானம்போக்கப்படுவது, துகில் உரியப்படுவது போன்றதன்றோ! ஆச்சாரியாரின் படையால்தாக்கப்பட்டு, உண்மைக் காங்கிரஸ் ஊழியர்கள்நிர்மாணித்த அரணில் தங்கி, இனிநமக்குப் பயமில்லை என்று எண்ணிய காமராஜரின் கதி, பாஞ்சாலிக்கும் நடக்கவில்லை. அம்மையைக் கண்ணன் காப்பாற்றினார்—கணவன்மார்கள் கைவிட்டபோதிலும்! இங்கோகாமராஜரின் கண்கண்ட தெய்வம், 20 வருடமாகப்பக்திவிசுவாசத்துடன் அவர் பூஜித்துவந்த தேவன், அவரைக் கைவிட்டார் — கைவிட்டதுடன் இல்லையே-பலிபீடத்துக்குத் துரத்தினார், ஆச்சாரியாரின் அடங்காத பசிக்கு இரையாகச் செய்தார். கதறிய பாஞ்சாலி முன்கண்ணன் தோன்றி, விரைவிலே துகில் உரியப்படுவதற்கான வழியைத் துச்சாதனனுக்குஎடுத்துக்கூறினார் என்றன்றோ தேசியபாரதம் எழுத வேண்டி இருக்கிறது!

காந்தியாரின் அறிக்கையின் விளைவு என்ன? கண்ணீர் பெருக்கியப்படி, கைகூப்பித்தொழுதபடி, பக்தகாமராஜர், "ஐயனே! அருள்பாலிக்கும் மெய்யனே! அடியேன்பிழையேதும் செய்திலேன்! எனக்கோ இத்தண்டனை? குற்றமற்ற என்னைக் கொற்றவனே! நீர்மற்றவர்உரைகேட்டுத் தண்டித்தீர். எனினும் உமதுகொற்றம் வாழ்க! இனியும் ஏழையேன், உமது அடிமையே!" என்றுபாசுரம் பாடிவிட்டார். தேர்தல் காரியக்குழுவிலிருந்துவிலகிக்கொண்டதாகக் காமராஜர் அறிக்கை விடுமுன், கண்ணீர்சொரியவில்லைஎன்று யார் கூறத்துணிவர்?

வரலாற்றுச் சம்பவங்களிலே ஒன்று என்றேஇதனைக்கூறுவோம். வதைக்கப்பட்ட வீரர்களிலே இவரும் ஒருவரானார்-எதிரியால்வதைக்கப்பட்டிருப்பின், வீரர்கோட்டத்தில் இடம்பெறலாம். இவரோதனது தேவனால், சித்திரவதை செய்யப்பட்டார்.

சிலம்புடன் நின்ற கோவலனை மன்னன் சீற்றத்துடன் நோக்கி, "களவாடிய கயவன்! அதை மறைக்க ஏதேதோ கதை பேசும் கபடன்" என்று ஏசிக் காவலரை நோக்கி, "கொண்டு செல்லுங்கள் கொலைக்களத்துக்கு; இக்கள்ளனை" என்று கூறியபோது, கோவலனின் கண்களிலே நீர் கொப்பளித்திருக்கும்-அந்தப் புனல், கனலெனக் கொதித்திருக்கும், "இவனோ மன்னன்! என்னைக்கள்ளனென்று உரைத்த இவனோ அரசன்! என் மனைவியின் காற்சிலம்பை விற்கவந்தேன், இங்கு கள்ளனென்று பழிக்கப்பட்டேன். இதுவோ நீதி!" என்று, கண்ணீர் வடித்துக் கோவலன் கூறியிருக்கக் கூடும்—இல்லை!—அந்த அநீதியின் போக்கு, அவனுக்குப் பேசவும் முடியாத நிலையை உண்டாக்கியிருக்கும்-பேசமட்டுமா-செயலையும் சிந்தனையையும் போக்கிவிட்டிருக்கும்-திடீரென- எதிர்பாராத விதமாக குற்றமற்ற தனக்குக்கள்வன் என்ற இழிபட்டமும்கொலைத் தண்டனையும் ஒரு கொற்றவனால் தரப்பட்டது என்று தெரிந்ததும்—கோவலன் திகைத்துப் போயிருப்பான்-பேசமுடியாத நிலைமை-சிந்திக்கவும் முடியாதநிலைமை ஏற்பட்டிருக்கும். விருதுநகர் வீரனும் விழியில் நீர் தளும்ப, திகைத்துப் போயிருப்பார், கோவலன் கொற்றவன் முன் நின்றகோலத்தைவிட, இவருடைய கோலம், பரிதாபத்துக்குரியது, இவருக்குத் தரப்பட்ட 'தீர்ப்பு" வழக்கு மன்றத்திலே இவரை நிற்கவைத்து நீதிதேவன் தந்ததல்ல, இவர் தொழுதுமுடித்ததும், எந்தக் "கண்கண்ட தெய்வத்தைத்" தொழுதாரோ, அவர், வழக்கை விசாரிக்காமலேயே, அளித்த தீர்ப்பு!! கோவலன் கண்ணீர் எம்மாத்திரம்!

என் கணவனைக் கள்ளனென்று கூறிய நீயோ காவலன்! என்று சீறிக்கேட்டு, மன்னனை மாண்டிடச்செய்த மறக்குடி மகளிராம் கண்ணகிபோலக் காமராஜருக்கு யார் உளர்? அவர் அடைந்த திகைப்பைக் கண்டதும், மற்றவர்கள், திகில் கொண்டவராகவன்றோ போயிருப்பர். புகலிடம் எது? எங்கேபோவது? எவரிடம் முறையிடுவது? வார்தாவுக்கு மேலான நீதிமன்றம் எது? எனவே, திகைப்படைவது தவிர வேறு வழி இல்லை! வேங்கையிடமிருந்து தப்பிப் பிழைக்க, குகைக்குள் ஓட, அங்கு சிங்கமிருந்த கதைபோலாயிற்று! துராத்மாக்கள், தொல்லை கொடுத்தால், மகாத்மாக்களிடம் முறையிட்டு, துராத்மாவைத் தண்டிக்கச் செய்யலாம்—அதுவே முறையுங்கூட! மகாத்மாவே தண்டனைதந்த பிறகு, என் செய்வது? சகாக்கள் சங்கடம் விளைவித்தால் சபர்மதிச் சன்னிதானம்போய்ச் சமர்ப்பிக்கலாம் வழக்கை, சன்னிதானமே "பிடிசாபம்!" என்று கூறிவிட்டபோது, எங்கேபோவது? என்ன செய்வது? யாரிடம் முறையிடுவது? காமராஜரின் திகைப்பின் காரணம் இதுவே!

காந்தியார், தேசியத்தின், நாட்டு விடுதலைக் கிளர்ச்சியின் தலைவர், அவருடைய கண்முன், யாவரும் ஒன்றே, உயர்ஜாதி என்று உறுமிக் கிடக்கும் உலுத்தருக்கு அந்த உத்தமர் இடந்தரமாட்டார், குற்றம்புரிபவர் யாராயினும் அவர் தண்டித்தே தீருவார், அவருடைய நீதிச்சக்கரம் பிழைபட உருளாது, அவருக்கு வேதியராயினும் அன்றி வேறு குலத்தவராயினும் ஒன்றே, அவர் ஓர் மகாத்மா, ஆகையால் அவர் மனதிலே, மாசு மருவு இருக்க நியாயமில்லை—என்று நமக்குச் சமாதானம்கூறக் காங்கிரஸ் தமிழர்கள், தவறியதில்லை. சமாதானத்தைக் கொஞ்சம்சூடாகவே சொல்வதிலும் அவர்களுக்கு ஒரு திருப்தி.

காங்கிரஸ் என்பது தேசியத் தேவாலயம், அங்கு கோயில் கொண்டு எழுந்தருளி யிருக்கும் தேவனே மகாத்மா, அவரைத் தொழுவதே தேசபக்தன் கடமை, அந்த ஆலயத்திலே அனைவரும் சமம்; பேதம் இல்லை, என்றுபேசப்பட்டாலும், அதன் அமைப்பு முறை, வேலைத்திட்டம், நிர்வாகிகள் போக்கு என்பவைகளைக் கவனித்து, ஒரு முறைக்குப்பல முறை பரீட்சித்துப் பார்த்தான பிறகே, அது ஆரிய சேவாஸ்ரமமே தவிர, தேசியஸ்தாபனமல்ல, அதுபோலக் கருதிக்கொண்டு மற்றவர்கள்செய்யும் கைங்கரியம், தரும் காணிக்கை யாவும், ஆரிய உயர்வுக்கே பயன் தரும், என்று நாம் எச்சரித்தோம், நாம் ஏளனம் செய்யப்பட்டோம்; கண்டிக்கப்பட்டோம்; எனினும் நமது பேச்சைமாற்றிக்கொள்ள மறுத்தோம்; ஆரிய சேவாஸ்ரமத்திலே ஆனந்த ஆர்ப்பரிப்பு அதிகரித்தபோதிலும், நாம் நமது பேச்சை மாற்றிக்கொள்ளவில்லை; ஏனெனில், நாம், மனமார அதனை நம்புகிறோம், மெய்ப்பித்துக்காட்டவும் தயாரிலிருக்கிறோம். காங்கிரஸ் பார்ப்பனீயப் பாதுகாப்புச் சபைஎன்று நாம் கூறின பச்சைப் பேச்சு, நச்சு நினைப்பல்ல, இச்சகம்பேச நாம் மறுத்ததால், உண்மையை உரைத்தோம்.

"காங்கிரசா, பார்ப்பன சபை? முழுப்புரட்டு! தமிழ் நாட்டவரே! நம்பாதீர் அந்தத்தருக்கர்உரையை! தமிழ்நாட்டுக் காங்கிரசின் தலைவர் யார்? ஐயரோ? இல்லை! காமராஜரன்றோ தலைவர்! அவருடைய தலைமையிலே நடைபெறும் காங்கிரசைப் பார்ப்பனசபை என்று கூசாது பொய்புரைக்கும் குறும்பரை என்னென்பது!" என்று ஏசினர், காங்கிரஸ் தமிழர். தலைவர் காமராஜ். தடையில்லை! ஆனால், முடி யார்சிரத்தில் இருந்தாலும், 'பிடி' பார்ப்பனரிடமே இருக்கும், கூர்ந்துபார் அன்பனே! கோபம் குறைந்த பிறகாவது பார் தோழனே!" என்று நாம் கூறினோம். காமராஜரின் தலைமைப் பதவியின் நிலைமைஎன்னவாயிற்று? தமிழ்நாட்டுக் காங்கிரஸ் தலைவர், காங்கிரசின் தாய்மைக்காக என்று கருதி, சகாக்களைக் கலந்து சம்மதம் பெற்று, மக்களிடம்கூறி அவர்களின் சம்மதத்தையும் பெற்று, அதற்குப் பிறகு, ஆச்சாரியார், 1942ல் காங்கிரசின் போக்கைக் கண்டித்தவர் ஆகையால், அவரைப் பிரதம பீடத்தில் ஏற்றக்கூடாது என்று தெரிவித்தார். இதிலே, நீதிபதிஸ்தானம் காமராஜருக்கு, அவர் தமிழ்நாட்டுக் காங்கிரஸ் தலைவர் ஆகையால்! குற்றவாளிக் கூண்டிலே ஆச்சாரியார், எந்தக் காங்கிரஸ்வாதியும், தவறு இழைத்ததாகக் கருதப்பட்டால், கூண்டுஏறித் தீர வேண்டும் என்ற நியதிப்படி. இதிலே நீதிபதி, ஒருதீர்ப்பு அளித்தார்! சட்டமுறைப்படி, ஆச்சாரியார், காமராஜரின் தீர்ப்பை எதிர்த்து, "மேல் கோர்ட்டுக்கு", அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டிக்கு மனுச் செய்துகொள்ளலாம். அதுதான் ஒழுங்கு. ஆனால் என்ன நடந்தது? காமராஜரின் தீர்ப்பை "சட்டை" செய்யாமல், ஆச்சாரியார் பவனிவந்தார், சில பராக்குக்காரர் உடன்வர! என்ன கூறிக்கொண்டுவந்தார், "திறமைசாலிகளைத் தேர்தலின்போது தேர்ந்தெடுங்கள்" என்று. அதன் பொருள் என்ன? நாமே வெட்கப்படுகிறோம், தமிழ்நாட்டுக் காங்கிரஸ் நிர்வாகிகள், ஏன் இந்த நிந்தனையைப் பொறுத்துக்கொண்டார்களோ என்பதைஎண்ணும்போது! இதற்கே அவர்மீது காமராஜர் ஒழுங்கு நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கலாம். செய்யவில்லை அச்சத்தாலோ, அன்பாலோ, அலட்சியத்தாலோ அல்லது ஆலய சேவையிலேஇலயித்ததாலோ. ஆச்சாரியார் என்ன செய்தார்? படைதிரட்டினார்! படைஎன்னசெய்தது? திருப்பரங்குன்றத்திலே, காமராஜரின் படைவரிசையுடன் கைகலந்தது. ஆச்சாரியார் போக்கைக் காங்கிரஸ் வீரர்கள் கண்டித்தனர். குன்றத்திலே, இவர்கள் கூடிப் பேசியபோது, ஆச்சாரியார், குற்றாலத்திலே குறுநகையுடன் உலவினார்! என் குறுநகை? என்ன பித்தம் இந்தக் காமராஜருக்கு? பலர் கூடி, தமிழ்நாட்டுக் காங்கிரசின்

தலைவர் என்று சத்தமிடுவதை நம்பி என்னை விசாரிக்கும் அளவுக்குத் துணிந்தாரே, இது நிற்குமா நிலைக்குமா? என் நினைப்பு அறிந்தால், போதுமே, காந்தியாரின் கட்டளை பிறந்துவிடுமே! இலட்சிய பூஷணத்தை ஆயுதமாகக் கொண்டு, என்னை எதிர்க்கத்துணியும் இந்த இளையோனை, வீழ்த்த எத்தனைநாள் பிடிக்கும். வெளிப்படையாகச் செய்தால், விநாடியில் வீழ்த்திவிட முடியும் என்றாலும், இதனைச் சுட்டிக்காட்டி, "இனஎழுச்சிக்காரர்கள்", திராவிடர் கழகத்தார் பயன்படுத்துவரேஎன்று பார்க்கிறேன். என் தயக்கத்துக்குக் காரணம் அதுதானே! அதனை உணராது, 'வீர உரை ஆற்றும் விநதையானிடம் நான் ஏதோ பயப்படுகிறேன் என்று அந்த இளையோன் எண்ணுகிறான் வீணாக. என் அச்சம் ஈரோட்டுக்குச்செய்தி போகிறதே என்பதன்றி, மயிலை பக்தவத்சலமும் மாங்காட்டு முத்துரங்கமும் விருதைக் காமராஜனும், கூடினரே என்பதா! இதனை அறியாது, போயினரே அவர்கள் என்றுஎண்ணியே குறுநகை புரிந்தார். அவருடைய கவலை எல்லாம், காமராஜரின் வேகம் தானாகக்குறையவேண்டும், தடுத்துக் குறைத்ததாக வெளியே தெரியக்கூடாது என்பதே தவிர, வேகம் அதிகரிக்கும், அல்லது தன்னை வீழ்த்திவிடும் என்பதல்ல.

அரசியல் அரங்கிலே அசப்அலி வந்தார். வந்தபோது நீதிபதியைக் குற்றவாளிக் கூண்டிலே நிறுத்தி வைத்தார்!! முதலில், குற்றவாளிக் கூண்டில் ஆச்சாரியார், விசாரணை நடத்திய நீதிபதி காமராஜர்! அசப்அலியின் நீதிமன்றத்திலே, காமராஜரும் ஒரு குற்றவாளிபோலவே விசாரிக்கப்பட்டார். கீழ்க்கோர்ட்டுத் தீர்ப்பை மாற்றவும் ரத்துசெய்யவும் மேல் கோர்ட்டு உண்டு, ஆனால் கீழ்க் கோர்ட் நீதிபதியை, (விசாரணைசெய்தகுற்றத்திற்காக)க் குற்றவாளிக் கூண்டிலே நிறுத்தும் முறை, அவருடைய நீதிபதி ஸ்தானம் இருக்கும்போதே, அதாவது காமராஜர் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவராக இருக்கையிலேயே, அசப்அலி அவரை விசாரித்தது, விசித்திரமான சட்டம், ஆனால் அதுதான் வர்ணாஸ்ரம வேலைத்திட்டம்.

ஆச்சாரியார் பக்கம் தீர்ப்பு! கோடு உயர்ந்தது குன்றம் தாழ்ந்தது! தாழ்ந்த குன்றம் கவிழ்ந்தது, ஆச்சரியத்துக்கு உரியதா? இன்று கவிழ்ந்தும் போயிற்று.

காந்தியார் வந்தார்—தரிசனம் தந்தார்—தீண்டாமையைக் கண்டித்தார்—திருக்கோயில் பூசித்தார்—சென்றார். ஆனால் இதற்கா, வந்தார்? ஆம்எனின்என்,காமராஜர்கள் அவருடன் குலவமுடியவில்லை;என் பூசுரக் கூட்டமே அவரைப் புடைசூழ்ந்து நின்றது? அவரை வரவேற்கவும் மாலையிடவும், உணவு அளிக்கவும் ஊர்வலமாக அழைத்துச் செல்லவும், உடன் இருக்கவும் உபசரிக்கவும், ஏன், அந்தக் குலத்துக்கே "மிராசு" கிடைத்தது? காங்கிரசின் 'ஜீவன்' வந்திருக்க, தமிழ் நாட்டுக் காங்கிரஸ் தலைவர், ஏன், அருகே காணோம்—என்றுநாம் கேட்டோம். வழக்கப்படி, "காமாலைக் கண்ணனுக்கு எதிலே குற்றம் காணலாம் என்பதே வேலை!" என்று தேசபக்தர்களால், கண்டிக்கப்பட்டோம். கவலைப்படவில்லை. காரணம், கண்டித்தவர்கள், நிலைமையைஉணராது பேசுகின்றனர்என்பது தெரியுமாதலால். காந்தியாரின் சென்னைப் பயணம், ஆச்சாரியாருக்கு முடிசூட்டத்தான் பயன்படும் என்று கூறினோம்—கண்டிக்கப்பட்டோம். இந்தவிதமான எண்ணம், நமக்கு மட்டுமல்ல, காங்கிரஸ் ஏடுகளிலே சிலவற்றுக்கும் ஏற்பட்டன. "சிவாஜி" என்ற ஏடு, 10-2-46ல்,

"மகாத்மாவின் விஜயத்தை, திரு. இராஜகோபாலாச்சாரியாரும் அவர் கோஷ்டியினரும் தங்களுக்கு அனுகூலமான வகையில் ஒரு அளவு பயன்படுத்திக் கொண்டார்கள். மகாத்மாவின் வாயால், திரு. இராஜகோபாலாச்சாரியாரைப் பாராட்டும்படி செய்து அதைப் பிரசாரம் செய்வதற்குப் பயன்படுத்திக் கொண்டார்கள். காந்திஜியின் அருகாமையில் நடமாட சி.ஆர். கோஷ்டியினருக்குத்தான் உரிமையிருப்பதுபோலச் சொந்தம் பாராட்டினார்கள்"

என்று எழுதிற்று. பெஜவாடாவிலே ஒருவர், காந்தியாரைக் கேட்டேவிட்டார், "ஆச்சாரியாருக்காகத்தானே தாங்கள் சென்னை வந்தீர்கள்" என்று. காந்தியார், கோபத்தோடு, "அப்படி ஒன்றும் இல்லை! ராஜாஜி விவகாரமாக நான் கவனமெடுத்துக்கொள்ளவில்லை" என்று கூறினார். உடனே ஒரு குதூகலம் பிறந்தது காமராஜர் சகாக்களுக்கு.

"திரு. ராஜகோபாலாச்சாரியாரைப் பற்றிப் பேசும்படி தன்னைப் பலர் கேட்டுக்கொண்டதாகவும் அதற்கு மறுத்துவிட்டதாகவும் மகாத்மா வெள்ளையாகப் பேசியிருப்பது, மகாத்மா காந்தி ஒரு மகாத்மாதான் என்பதை எடுத்துக் காட்டுவதோடு, திரு ராஜகோபாலாச்சாரி கோஷ்டியினர் ஒரு சதிகாரக் கூட்டம் என்பதையும் ஊர்ஜிதப்படுத்துகிறது" என்று 'சிவாஜி' வெற்றிச் சிரிப்புடன் விளக்கம் கூறிற்று.

வார்தாவிலிருந்து கிளம்பிற்று, அறிக்கை! அறிக்கையா? இல்லை! இது எச்சரிக்கை!!

எந்த ஆச்சாரியார், காங்கிரசின் கண்ணியத்தை, கட்டுப்பாட்டை, கட்டளையைக் காற்றிலே உதிர் சருகு என்று கருதினாரோ, அவருடைய 'சேவை' யைத் தமிழ்நாடு இழக்கக்கூடாது என்று காந்தியார் கூறினார்.

ஆச்சாரியார், ஆகஸ்ட்டுக் கலவரத்தை ஆதரிக்கவில்லை, கண்டித்தார், தியாகிகளைப் பழிக்கிறாரே என்று காமராஜர்கலங்கினார்; காங்கிரசுக்கே இது துரோகம் செய்வதல்லவா என்றார், ஆம்! இது அக்ரமம்! துரோகம்! காங்கிரஸ் பெரிதே தவிர ஆச்சாரியார் அல்ல! என்று தமிழ்நாட்டுக்காங்கிரசார்கூறினர்; நாடெங்கும் ஆகஸ்ட்டுத் துரோகி ஆச்சாரியாருக்குஇடம்கொடாதே என்று ஆர்ப்பரித்தனர், அந்தத் 'துரோகத்தை'ப்பற்றிக்காந்தியார், தமது அறிக்கையிலே, என்ன கூறினார்? 1942ல் ஆச்சாரியார் நடந்து கொண்டதை நான் அறிவேன். அவருடைய வீரமும் விவேகமும் போற்றத்தக்கன! ஆச்சாரியாரைத் துரோகிஎன்றுநாடுகூறினால்என்ன, காந்தியார், அவரை வீரர், விவேகி என்று, (அதே விஷயத்துக்காக) பாராட்டுகிறார். காமராஜர், வீரர், தியாகி, பக்தர், வீண் கிளர்ச்சிக்காரரல்ல, அவருக்குப் பொதுமக்கள் ஆதரவு இருக்கிறது, ஆச்சாரியார்மீது அவருக்குத்துவேஷமோ, அவரைக் கவிழ்க்கவேண்டுமென்ற கெட்ட எண்ணமோ கிடையாது, காங்கிரசுக்குக் கண்ணியம்இருக்கவேண்டுமென்பதற்காகவே அவர், தமிழ்நாட்டுக்காங்கிரசாரின் பெருவாரியான சம்மதத்தைக்கேட்டுப் பெற்றபிறகு, ஆச்சாரியார் போக்கைக் கண்டித்தார், என்று மக்கள் மன்றத்திலே பேசிக்கொண்டனர், மகாத்மா,'காமராஜர்கூட்டத்தை' சதிகாரக் கும்பல் என்று கூறிவிட்டார். Clique என்ற ஆங்கிலப் பதத்தை உபயோகித்தார் காந்தியார். இதுமிகமிகக் கடுமையான சொல் என்று தினமணி கூறுகிறது. மட்டரகத்தைத்தான் 'கும்பல்' என்று அழைப்பார்கள்! இருபது ஆண்டுப்பக்தி விசுவாசத்தின் பலனாகக் காமராஜர்கண்டது, தானும் தனது நண்பர்களும், ஒரு விவேகியை, வீரரை, வீழ்த்துவதற்காக வேலை செய்யும் 'கும்பல்' என்று காந்தியாரால் அழைக்கப்பட்டது தான்! எவ்வளவு பூஜை! அதற்குக் கிடைத்த பலன்எவ்வளவு அருமை!

நான் சென்னைக்குச் சென்றது, இந்தப் பிரசாரத்துக்கே தவிர, ராஜாஜி விஷயமாக அல்ல என்று கூறிய காந்தியார், என்னிடம் சிலர் ராஜாஜி விஷயமாகக் கேட்டார்கள் நான் ஏதும் கூறமுடியாது என்றுகூறிவிட்டேன் என்று பெஜவாடாவில் பேசிய காந்தியார், எதற்காக, எந்த நெருக்கடியைத் தீர்க்க, எந்த மகத்தான ஆபத்து தமிழகத்துக்கு வராதிருக்கச் செய்ய, திடீரென்று வார்தாவிலிருந்து, "ராஜாஜியை ஒரு கும்பல் தொலைத்துவிடக் கருதுகிறது" என்ற எச்சரிக்கையையும்,'ராஜாஜி, விவேகி,வீரர்' என்ற சிபார்சையும், "அவருடைய சேவையைத் தமிழ்நாடு இழக்கலாகாது" என்ற மிரட்டலையும் அறிக்கை வடிவிலே ஏவவேண்டும்? "காங்கிரசிலே நாலணா அங்கத்தினருமல்லாத என்னை ஏன் இவையெல்லாம் கேட்கிறீர்கள்" என்று நாசுக்காகப் பேசும் காந்தியார், ஏன், காமராஜர் விஷயமாகக் கனல் கக்கவேண்டும்? கவலை எடுத்துக் கொண்டவர், அதை ஏன் சென்னையிலே கூறாது, வார்தா சென்றுகூறினார்? கூறுமுன்பு சென்னையிலே காமராஜரை அழைத்து விசாரித்தாரா? மட்டரகமான "கும்பல்" என்றபதத்தை உபயோகிக்கவேண்டிய அளவு, காமராஜரும் அவருடைய சகாக்களும் செய்த காரியம் என்ன? ராமும் ரஹீமும் ஒன்றே என்னும் பஜனையில் ஈடுபட்டிருந்த'மகாத்மாவுக்கு' இந்த விஷயமாக விசாரிக்க நேரம் இருந்ததா? காமராஜர் போன்றவர்கள் ரொம்ப மட்டரகம், 'அது ஒரு கிளிக்' என்று யாராவது சொல்லியிருந்தாலொழிய, இவராக அந்த முடிவுக்கு வரமுடியுமா? இவர் அந்தக் கிளர்ச்சி சம்பந்தமாகக் கவலை செலுத்தியதாக ஆதாரமும் இல்லாதபோது,அவருடையவார்த்தையை, பிறர் செருகியது என்று தானே கொள்ளமுடியும்? காமராஜரையும் அவருடைய நண்பர்களையும் "கும்பல்" என்று கேவலப்படுத்திப் பேசியவர் யார்? அவர், காமராஜரைவிட, வீரத்தில் தீரத்தில் தியாகத்தில் அறிவில் ஆற்றலில், உயர்ந்தவரா? என்ன உரைகல்? யார் இருக்கிறார்கள் கேட்க!!

"காமராஜரின் கும்பல்"பற்றிக் கேள்விப்பட்டஉடனேகாந்தியார், சத்திய சோதனையில் ஈடுபட்டுள்ளவர், செய்யவேண்டியது என்ன? ஜார்கூட, "கும்பல்"மீது விசாரணை செய்யாது பாய்ந்திடவில்லை!போலி விசாரணையாவது நடந்திருக்கும். காந்தியார், ஏன் காமராஜரை விசாரித்திருக்கக்கூடாது? காமராஜர் காந்தியாரைக் காணவில்லையோ? கண்டார்! கேளுங்கள் காமராஜரின் சோகம் கப்பிய பேச்சை, "காந்தியாரை நான் தரிசித்தேன்.' தரிசனம் தந்த மகாத்மா, விசாரித்தாரா? இல்லை! ஓய்வு இல்லையோ? ஒரு முறைக்கு இருமுறை, காங்கிரசில் சேராத, காங்கிரசைக் கண்டித்த, ஏகாதிபத்தியத்தின்செல்லப்பிள்ளையாக இருந்த, மகாகனம் சாஸ்திரியாரை, காந்தியார் போய்ப் பார்த்துப் பேசிவர நேரம் இருந்ததே, காமராஜரிடம் பேசத்தானா நேரம் கிடைத்திருக்காது!! எவ்வளவு அலட்சியப்படுத்தப்பட்டார், காமராஜர்! அதை அவர் எவ்வளவு 'சாந்தத்துடன்' பொறுத்துக்கொண்டார்!! எவ்வளவு சகிப்புத்தன்மையுடன், காமராஜர், அந்தப் பத்து நாட்கள் இருந்தார். 'இஷ்டஜன பந்து மித்ராளுடன்' 'குசலம்' விசாரித்துக் கொண்டும், உபசாரம் பேசிக்கொண்டும், காந்தியார் இருந்த அந்தப்பத்து நாட்களும், காந்தியாரைப் புகழ்ந்து பாடாத நாளெல்லாம் பிறவாநாளே என்று கருதிக்கொண்டிருந்த காமராஜர், பொள்ளாச்சிக் குருடரிடமாவது காந்தியார் பேசினார் இருமுறை, பஸ் ஓட்டுபவரிடமாவது பேசினார், பாவி நான் அந்தப் பாக்கியம் செய்யவில்லையோ,பண்ணேனுனக்கான பூஜை பலநாளுமே பாலித்தருளாயோ, என்றுகசிந்துஉருகினாரோஎன்னவோ!காமராஜர்,'ஜலதோஷம்'பிடித்ததால்,காந்தியார் அருகே போகமுடியாது இருந்தாரோ? இல்லை! அருகேயே இருந்தார்! அந்தப் பரிதாபத்துக்குரிய தண்ணியவான்கூறுவதைக்கேளுங்கள்-கேட்டுவிட்டுக்கண்ணீரைத்துடைத்துக் கொள்ளுங்கள்; "நான் காந்தியாருக்குக் கூப்பிடுதூரத்தில்தான் இருந்தேன். என்னிடம் இதுவிஷயமாக அவர் ஏதும் பேசவில்லை என்பது எனக்கு வேதனையாக இருந்தது" என்று கூறினார். கூப்பிடு தூரம்! கூப்பிடுதூரம்!! ஒரு குரல், "காமராஜ்!" என்று கிளம்பியிருந்தால், "பாபுஜீ!" என்று பக்தர், பரவசத்தோடு, கூறிக்கொண்டே அருகே போயிருப்பார், கேட்டகேள்விகளுக்குப்பதில் கூறியிருப்பார், தவறு இது என்று காட்டியிருந்தால் திருத்திக்கொள்வார், இப்படி நட என்று கட்டளையிட்டால்கூட ஏற்றுக்கொண்டிருந்திருப்பார், ஆனால் பாபூஜீ, கூப்பிட்டால்தானே! காமராஜர், கூப்பிடு தூரத்தில்தான் இருந்தார்!! கோகில கானம்பாட, கோபாலசாமிகள் தாளம்போட, ஆரியம் ஆனந்தமாக ஆட, அதைக் கண்டு களித்துக்கொண்டு, அமிர்த குமாரியும், சுசிலர்தேவியும், புடைசூழ வீற்றிருந்த பாபூஜிக்கு, கூப்பிடுதூரத்திலே காமராஜர் இருந்தால் என்ன! எப்படிக் கூப்பிடுவார்? ஏன் கூப்பிடவேண்டும்!! அவ்வளவு கவனிப்புக்கு உரியவரா? அவர், தமிழ்நாட்டுக் காங்கிரசுக்குத் தலைவராக இருக்கலாம்! இருக்கட்டுமே! அதற்காக, சம்பந்தியிடம் சண்டைபிடிக்கும் துணிவு கொண்ட பேர்வழிக்கு, "தரிசனத்திலே" இடங்கொடுத்ததே, 'ஐயோ பாவம்' என்பதற்காக! கூப்பிட்டு வேறேபேசவேண்டுமா? — என்று கருதினார்போலும். கூப்பிடுதூரத்தில் இருந்தார், கூப்பிடப்படவில்லை! கேட்பார்கூறலாம் என்று ஆவலுடன் இருந்தார், ஏதும் கேட்கவில்லை!போய்விட்டார்,இனி ஆச்சாரியார் விஷயமாகப் புகை ஏதும் இராது என்று நம்பினர், அப்போதுதான், வார்தாவிலிருந்து வீசினர் வெடிகுண்டு! கூப்பிடு தூரத்தில் இருக்கும்போது வீச முடியாதல்லவா? ஆகவேதூரமதம்!

காமராஜர் என்ன செய்வார்? புண்பட்ட மனம்! ஆனால் சேவை செய்யும்பண்பிலேபழக்கப்பட்டுப் போனார். எனவே, ஆச்சாரியாருடன் தகராறு வருவதைத் தடுத்துக் கொள்ளவேண்டும். அபாயச்சங்கு ஊதியதும்,குப்புறப்படுக்கிறார்கள்! காந்தியாரின் அறிக்கை வந்ததும், சட்டசபை சம்பந்தமாகத்தானே சச்சரவுவருகிறது. நான் தேர்தல் கமிட்டித் தலைமைப்பதவியை ராஜிநாமாசெய்கிறேன், என்று கூறிவிட்டார். வேறுவழியில்லை! என்ன கூறுவதன்! அந்த வேதனையும்

வாசகத்தை இருமுறை, காமராஜர் தமது அறிக்கையிலே உபயோகிக்கிறார். ஆச்சாரியாரால் அலைக்கழிக்கப்பட்டு, 'கல்கி'யால் 'சின்னத்தலை'யாக்கப்பட்டு, காந்தியாரால், அலட்சியப்படுத்தப்பட்டு, கடைசியில்,வார்தா அறிக்கையால், வதைக்கப்பட்ட காமராஜர் கண்ணீர் பெருக்கிநிற்கும் காட்சி, தமிழன் உள்ளத்திலே ஆழப்பதிந்துவிட்டது

வேறு வழியில்லை! ராஜிநாமாச் செய்கிறேன்!!

காப்பாற்றுவார் இல்லை! கிணற்றில் விழுகிறேன்!!

குற்றம் செய்தவனல்ல! ஆனால் தண்டிக்கப்படுகிறேன்!

இவற்றைச்சொல்பவருக்குக் கூடச்சிரமம்இல்லை, கேட்கிறோமே நமது செவியால், நம்மால் சகித்துக்கொள்ளமுடியவில்லை!

போர்க்களத்திலே எதிரியின் வாளுக்கு மார்காட்டி, மண்மீது சாயும், சகோதரனைக்காணலாம், சகித்துக்கொள்ளலாம், எங்கே நமது அண்ணனைக் கொன்றவன் என்றுதேடலாம், போரிடலாம், அவனை வீழ்த்தலாம், அல்லது நாமும் சாகலாம். வழி உண்டு, ஆறுதல்பெற!

மாற்றானின் வஞ்சகமாளிகைக் குள்ளே புகுந்துகொண்டு, அவன் மனம்போன போக்குக்கு ஏற்றபடி எல்லாம் நடந்துகொண்டு, கடைசியில் அவன் ஏசிப்பேச,அது பொறாமல், மாளிகையிலே ஓரிடத்தில், தூக்கிட்டுக்கொண்டு, "என் செய்வேன்? நான் இருந்தால் தானே இந்தக் கொடுமை! இதோ சாகிறேன்"என்று சாளரத்தருகே நிற்கும் தம்பியின் செவியில் விழும்படி, அண்ணன் அலறினால், எப்படிக் கேட்டுச் சகித்துக்கொள்ள முடியும்! ஆறுதல்பெற வழி இல்லையே! மறக்கவும் முடியவில்லையே!

இனி என்ன நடக்கும்? காமராஜர், புரட்சி செய்யப்பார்த்தார், அடக்கப்பட்டார், என்று, ஆரிய ஏட்டிலே பொறிக்கப்படும். காமராஜர் கண்ணீர் பெருக்கிக்கிடக்க, ஆச்சாரியார் காந்தீயப் பன்னீரில் குளித்தெழுந்து,பரவிப் பட்டாடை உடுத்திக்கொண்டு, பவனி வருவார்! ஒருசமயம், அந்தப் பவனிக்குக் காமராஜரே சாமரம் வீசச்செய்யப்படலாம்!! எதுவும் நடக்கக்கூடும், எத்தரிடம்சிக்கிய ஏமாளிகள் நிரம்பிய நாட்டிலே!! தமிழ்நாட்டுக் காங்கிரசுக்குக் கோவை சுப்பையாவோ, வேலூர் குப்பரோ தலைவராகக்கூடும்! காமராஜர், இலட்சோபி இலட்சத்தில் ஒருவர்என்று ஆகக்கூடும். இவ்வளவுகூட இந்த வீரருக்கு முடிந்ததற்குக்காரணம்,சிலஏடுகள் இவரைஆதரித்ததால்தானே! இனிஇந்த ஏடுகள், விஷயத்துக்கு 'மூடி' போட்டுவிடும்! போடத்தானே வேண்டும்! இல்லையேல், வீரர்கள், தியாகிகள், என்றவிருது பெற்றவர்களைக் 'கும்பல்' என்று கூறிய சாந்தியார், தேசியதினசரி, பாரதநேவியின் முரசு, சுதந்திரத்தின் சங்கு, தேசசக்தியின் மணிஓசை என்ற விருதுகள் பெற்றஏடுகளை, 'குப்பை" என்றுகூறிவிடுவார். இன்று அந்த ஏடுகளெல்லாம், "இப்படி நடக்குமென்று தெரியாமல் போய்விட்டதே! காந்தியார் இதிலேதலையிடமாட்டார் என்றல்லவா எண்ணி ஏமாந்துபோனோம்." என்று நடுக்கும்குரலில்பேசும். பாவம், அவைஎன்ன செய்யமுடியும்! '[illegible]னமணி' எழுதியபடி, தர்மசங்கடமானநிலைமைதான்! வெற்றிபெற்றபிறகு ஆச்சாரியாருக்குத் துதிபாடும்! ஏன்! இன்னும் சிலஏடுகள், இன்று இல்லாவிட்டால் சின்னாட்களுக்குப் பிறகு, காமராஜரின் உண்மை நோக்கம் தெரியாமல், நாம், அவருடைய முயற்சியைக், கண்ணியமான காரியம் என்று நம்பி ஏமாந்துபோனோம். அவர் ஓர் வகுப்புவாதி என்பது இப்போதுதான் தெரிகிறது. அதனை முன்கூட்டியேதெரிந்ததால் தான் ராஜாஜியும் காந்திஜியும் அவரை எதிர்த்தனர், என்று எழுதவுங்கூடும்!

காமராஜரின் எதிர்காலத்தைப்பற்றி நாம் கவலைப்படவில்லை. அவர் அதனைச் சித்தரித்துக்கொள்ள வேண்டியவர்—சக்தி இருந்தால்! தமிழன், காங்கிரசிலே சேர்ந்தால் இலட்சியங்கள் பூர்த்தியாகும் என்று பேசுகிறார்களே சிலர் அவர்கள் காமராஜரின் கண்ணீரைக்கண்டு, தெளிவடைவர் என்பது உறுதி. தமிழன் வீரத்தால், தியாகத்தால், தேசபக்தியால், காமராஜர்போல, தமிழ்நாட்டுக்காங்கிரசுக்குத் தலைவராகலாம்! ஆனால் தக்ககாரணம் இருப்பினும், தமிழ்நாட்டுக் காங்கிரசே தன்பக்கம் இருப்பினும், ஒரு தர்ப்பாசூரனை யாவது, எதிர்க்கத்துணிந்தால், எத்தனைவருஷம் பக்தியோடுபூஜித்திருந்தாலும், பூஜையை ஏற்றுக்கொண்ட தேவனே, "பிடி, சாபம்!!" என்றுதான் கூறுவார்! காங்கிரஸ், என்பது ஆரிய சேவாஸ்ரமம் என்பது இச்சம்பவத்தால் உறுதியாயிற்று. கருத்துள்ளோர்யாவரும் காணலாம். காமராஜரின்கதியைக்கண்டு, பாடம்பெறலாம்.

ஆனால், காமராஜர், காங்கிரசைவிட்டு விலகுவார் என்று நாம் நம்புகிறோமா? இல்லை! நம்பவுமில்லை! அவருக்கு அந்த யோசனையைக் கூறவுமில்லை. திராவிடர் கழகம், நெருக்கடியான நேரத்தில் கண்ணீர் வடித்துக்கொண்டு, வேறுவழி இல்லையே என்று கூறும், "பக்தர்களை" அழைக்கவில்லை — தேவையில்லாததால்! காமராஜர்கள், அங்கேயே இருக்கட்டும். ஆனால் ஒருவிஷயத்தைமட்டும்உறுதியாக நம்பட்டும், அவர்கள்படும்அல்லலை,அவர்கள் அங்கு ஆரியத்தால்அடக்கப்படுவதை, அவர்களின் ஆண்மை மங்குவதை, திராவிடர்கழகம் கவனித்துவருகிறது, ஆரியத்துடன் அக்கழகம்நடாத்தும்போரிலே, அவர்கள் சார்பாகவும், நிச்சயமாகத்திராவிடர்கழகம் பேசும்! காமராஜரின்கண்ணீரை திராவிடர் கழகம் கருப்புச் சட்டைப்படை துடைக்கும்—அவர் அடைந்த கதியால், தமிழனுக்கு ஏற்பட்ட தாழ்நிலையை, நிச்சயமாகத் திராவிடர் கழகம் போக்கும். வீழ்ச்சியுற்ற இனத்திலே, இதுபோல.விழியில் நீருடன்,வீரர்கள்,இருப்பதுண்டு,ஆனால், எழுச்சி பெற்றதும், அந்த இனத்திலே தோன்றும் வீரர்கள், முன்னவர்சிந்திய கண்ணீரைக் கவனத்திலிருத்தி மாற்றான் மண்டியிடும் அளவு வெற்றிபெற்று அந்த வெற்றிநாளன்று, வீழ்ந்துகிடக்கும் மாற்றானைநோக்கி, 'மமதைகொண்டவனே! உன்மயக்க மொழியிலே சிக்கிய மறத்தமிழனைச் சீரழித்தாயே அன்று! உன்னால் அடைந்தவேதனையைத் தாங்கமட்டாமல் விழியில் நீர்பெருக்கினனே! அந்தக்கண்ணீர், இந்தக்கூர்வாளாயிற்று" என்றுகூறுவர். காமராஜரே! கவலையைக்கொஞ்சம் துடைத்துக்கொண்டு பாரும், ஊரெங்கும் தோன்றியுள்ள, கருப்புச் சட்டைப்படையை! தமிழனின்கண்ணீரைத் துடைக்கும் பணியே, அந்தக் கருப்புச் சட்டைப் படைக்கு! கண்ணீர் துடைக்கப்படும்.


## திராவிட மாணவர் மாகாண மாநாடு

23, 24—2—46 இருநாட்கள்

இடம்: நீடாமங்கலம்

தலைவர்கள்:

A. இராமசாமி, M.A.L.T.

C. N. அண்ணாத்துரை, M.A.,

திறப்பாளர்: S. காந்தம் சுந்தரவடிவேல் அம்மையார், M.Sc

கொடியேற்றுவிழா: லாரன்ஸ் அம்மையார்.

பெரியாரும் மற்றும் இயக்கத் தோழர்களும் வருகின்றனர்.



## காஞ்சி டிஸ்டிரிக்ட் முன்சீப்கோர்ட்

O. P. 58/1945

K.K. எதிராஜம்மங்கார்-மனுதார்

K.K. சர்வலோகசரண்ய பாவனச் சார்யஸ்வாமி—கவுன்ட்டர் மனுதார்

மனுதார் கவுன்ட்டர் மனுதார் பேரில் ஜீவனாம்சம்பெற வியாஜியம் செய்திருப்பதால் மனுதாரரை பாப்பராக அங்கீகாரம் செய்ய 22-2-46தேதிக்கு வாய்தாபோட்டிருக்கிறதென்பதை அறியவும்.

N. S. பாஷ்யம் அய்யங்கார்,

(17-2-46.) மனுதார் வக்கீல்.


## காமவேள் நடனசாலையில்

3-ம் பக்கத் தொடர்ச்சி

ஆண்டு அனுபவித்துக் கொண்டு வரும்கூட்டம்பெறமுடியும்? இதனை உணராத சிலர், வேறு எத்தனையோ கருத்துகள், நாளாவட்டத்திலே நசித்துப்போனது போலவே,பொதுஅறிவுபரவினதால் அவை புதையுண்டதுபோல, மிச்சமிருக்கும் நச்சுநினைப்பும் பிச்சுப்பிள்ளை விளையாட்டும் தாமாகவே ஒழிந்துபோகும் என்று நம்புகிறார்கள். அந்த நம்பிக்கையிலே வடலூராரும், "கண்மூடிவழக்கமெல்லாம் மண்மூடிப்போக" என்று கூறினர். கூறினதைக் கீதமாக்கிக்கொண்டனரே யொழியக், கண்மூடி வழக்கத்தை யார் வெட்டிப்புதைக்க முன்வந்தனர். அருட்பாவைப்பூசத்துக்கேற்ற பாசுரமாக்கினரேயொழிய பூசுரப்புரட்டு ஒழிப்புக்கான மார்க்கமாகக் கொண்டவர்கள் யார்? எனவேதான், ஒரு கூட்டத்துக்கு அதுபார்ப்பனக்கூட்டமாக இருப்பதால் என்றுமட்டுமல்ல,எந்தக்கூட்டமாக இருப்பினும்சரியே, ஒரு கூட்டத்தின் சுய நலத்தை வளர்க்கும் எண்ணங்களைச்சுலபத்திலே மடியவிட மாட்டார்கள், இங்குமட்டுமல்ல, எங்கும்! அந்த எண்ணங்களைத்துணிவுடன்தாக்கித் தகர்த்தாலொழிய அவை மாளா. அவைமாளஒட்டாது தடுக்க, சகல சாதனங்களையும் உபயோகிக்க,சுயநலக்கூட்டம் ஒருதுளியும் தயங்காது. அந்தச்சாதனங்களிலே மிக முக்கியமானது, புராணப்பிரசாரம்! இதனை, நமது நண்பர்கள், இலக்கியச்சுவைக்காக என்றோ, சல்வெட்டு,வரலாறுஎன்றோ எண்ணிக் கொண்டு, செய்பவர்களாகக்கூட இருப்பர். கதை கிடக்கட்டும், இதிலே காணக்கிடைக்கும் வரலாற்றுத்துணுக்குகளின் மூலம் தமிழகத்தைக் காண்கிறோமே என்று பூரிக்கக்கூடும்.

> "பங்கப்பழனத்து உழும் உழவர்
> பலவின் கனியைப்பறித்ததேன்று
> சங்கிட்டு எறிய"

என்று செய்யுளைப்பாடி," என்னே! இந்நாட்டு வளப்! உழவர் உழுகின்றனர்! உழவுதானே உயிர்கட்கு ஆதாரம்! ஆகலானன்றோ தெய்வப் புலமைத் திருவள்ளுவனாரும் "உழுதுண்டு வாழ்வாரேவாழ்வார்" என்றார். அத்தகைய உழவு! ஆங்கு மரங்களிலேமந்திக்கூட்டம்! அவை பலாவினைப் பறித்தன. பார்த்த உழவர், மந்தியை விரட்டுகின்றனர். யாங்ஙனம்? கல்கொண்டோ? இல்லை! கல் ஏது? கட்டாந்தரையோ அது! அல்ல! வயல்! எனவே உழவர், அங்கு கிடந்தது கொண்டு, மந்தியினை விரட்டலாயினர். என்ன கிடைத்தது? இங்கேதான் மெய்யன்பர்கள், நந்தமிழ் நாட்டின், தவம்நிறைந்த தமிழகத்தில், செந்தமிழ் நாடெனும் போதினிலே இன்பத்தேன்வந்து பாயுது காதினிலே என்றுஇந்நாள் புலவர் இறும்பூதெய்திப்பாடியபடி பண்பு நிறைந்த தமிழகத்திலே, எத்தகைய வளம் இருந்தது என்பதனைக்கூர்ந்து நோக்குதல் வேண்டும். வயலிலே சங்குகள் கிடைத்தன! வளமான நாடு! இதற்கு உண்டோ ஈடு? சங்குகள்! சங்குகள்! உழவர்கண்டது சங்குகளே! வாரினர்!வீசினர்!" என்று செய்யுளைப் பிழிந்துபிழிந்து செந்தமிழ்ச்சுவையைச் சொட்டச் செய்து, புராணமேயாயினும், புதுமைக்கு ஒவ்வாது எனினும், புதைந்துள்ள பொன்னைக்காணீர், கலைக் கருவூலத்தைப்பாரீர்," என்றுகூறப் புராணங்களைப்பயன்படுத்திக்கொள்பவர்களாகச்சிலர் இருக்கக்கூடும். எக்கருத்துக்காக, எம்முறையிலே இவர்கள் அந்தப்புராணங்களைப்பற்றிப்பேசினும் சரியே, பொதுவாக அப் முறை, புராணப்பிரசாரம்கடை பெறுவதாகவே முடியும். விளைவும், இவர்களின் நெஞ்சை அள்ளும் கலை பரவுவதாகவோ, வரலாறு பரவுவதாகவோ இராது. விளைவு, கற்பூரக் கடையின் கணக்கும்,கனபாடியின் தொந்தியும் பெருத்துவிடுவதாகத்தான் இருக்கும். புராணப்பிரசாரத்தின்பலனைப் பூசுரக்கூட்டம் இனிமையாக அனுபவிக்கும், இதனை, அந்தக்கூட்டத்துக்குக், கூலியுமின்றிச்செய்த "குரவோர்," புலவர், படிப்பாளி, ஞானமானவின் வைரி, அவர்நாவிலே சரஸ்வதியே தாண்டவமாடுகிறாள்,சகலகலாவல்லவர், என்ற ஓசைப்பட்டங்களைப் பெற்றதன்றி வேறு உருவான பலனையும் பெறுவதில்லை. இதனை அவர்கள் உணருவதில்லை. உணர்ந்தோர் உரைத்தாலோ, சீறுமலும் இருப்பதில்லை! சிவநேயர்களின்சீற்றம் சிரிப்புக்கிடமானதே!! இங்கே சீறுகின்றனர் இச்செல்வர்கள். ஆனால்செல்புகுந்த ஏடுகளைச் செந்தமிழ் கலந்து நாட்டினருக்குத் தரும் இவர்தம் "சேவையால்" பட்டமரம் துளிர்த்ததுபோல, பாழ்பட இருந்த தமது சுகபோகவாழ்வு, மீண்டும் வளமாகிறது என்பதை உணர்ந்து, அந்தச் சிறுகூட்டம், சிரிக்கிறது!! பாவையர் 'படப்பிடிப்பும்'கலைச்சுவையும், வரலாற்றுத்துறையும், உள்ளன என்று புராணங்களைப், போற்றிப் புகழ்பவர்கள், ஆரியத்தின்ஏஜண்டுகள் — கமிஷனும் கிடையாது!! காமக்கூத்து நடைபெறும் இடத்திலே கர்ப்பூரக்கடை வைப்பதுகடவுள்நெறியைக் கயவரும் உணரச் செய்யும் புண்ய கைங்கரியமாகும் என்றுகருதிச்செய்பவர்உண்டோ? செய்தால் பயன் என்ன காணமுடியும்! அதுபோல, காமக்கிருமிகள் நெளியும் பலபாடல்களுக்கு இடை இடையே கடவுள் சொரூபத்தைக் காட்டுகிறோம் பாரீர், என்று புராணம் படிப்பதும், பயனற்றமுறையாகும். புராணப்பிரசாரத்தின்விளைவாக, சன்மார்க்கம் பரவமுடியாதபடிபோகிறது என்பதுமட்டுமல்ல, கலைக்காக, வரலாற்றுக்காக, என்று எதைக்கூறி அந்தக் காரியத்தைச் செய்தாலும் சரியே, அச்செயல், பூசுரஅரசுஅமைக்க, புலவர் முரசு கொட்டுகிறார் என்றே பொருள். இந்தக்காரியத்துக்கா தமிழ் அறிவு பயன் படுத்தப்பட வேண்டும்? பெற்ற மகனைப்பெருநிதி படைத்தோனாகக் காணமுடியாவிட்டாலும், பிறன்மனை நுழையாதபடியாவது தடுக்கக்கூடாதா — தடுத்தல் வேண்டாமா? கற்றதமிழின்துணை கொண்டு, சமுதாயத்திலே கப்பிக் கொண்டுள்ள காரிருளை நீக்கும் கடமையைச்செய்யத்தான் தவறிவிட்டார்களே, அத்தமிழை ஆரிய உமிழ்நீரிலேஆழ்த்தும், அக்ரமத்தை யாவது செய்யாதிருக்கக்கூடாதா?"


## விளம்பரம்

## காஞ்சி டிஸ்டிரிக்டு முன்சீப்கோர்ட்

O. S. No. 194/1944
E. P. No. 589/1945
E. A. No. 1044/1945

வாதிகள்:

A. K. திருவேங்கிடாசாரியார், வகையரா.

பிரதிவாதிகள்:

முருகேச செட்டி, வகையரா.

6ம் பிரதிவாதி எல்லூரி சின்ன சுப்பய்ய செட்டியாருக்கு, வாதிகள் ஏலஇஸ்தியார் ஷரத்து நிர்ணயிக்கவும் ஏலத்தில்பீட்கேட்கவும், மனு கொடுத்து 27-2-46 நோட்டீசு வாயிதா போடப்பட்டிருக்கிறது.

காஞ்சிபுரம், 17-2-46.

கே. வி. ஸ்ரீனிவாசாசாரியார், வாதிகள் வக்கீல்.

# எரியிட்டார்! என்செய்தீர்?

—(வீரன்)—

★

"இராமாயணம், புண்யகதை என்பதற்காகப்படிக்க வேண்டியதில்லை, அதிலே உள்ள கதை அழகு, காவியஇரசம், கலை அருமை ஆகியவற்றுக்காகப் படியுங்கள். இராமனைத், தெய்வமென்று எண்ணிக்கொண்டு, பூஜைநூலாக இராமாயணத்தைக் கொள்ளவேண்டியதில்லை, கலாபெட்டகமாகக் கொள்க!" என்று நம்நாட்டுக் கலாவாணர்கள் கூறுகின்றனர்—வாதாடுகின்றனர்—பாடுகின்றனர்.

"இராமாயணம்," நம்பமுடியாத கதை. அதிலே கதாபாத்திரங்களாகச் சித்தரிக்கப்பட்டவர்களின் குணங்கள், அர்த்தமற்றதாக உள்ளன. 'ஆரியதர்மத்தைப்' பரப்பவந்த நூல் அது. ஆரிய ஆதிக்கம் ஒழியவேண்டுமானுல், அந்த ஏடுகளைக்கண்டிக்கும் அறிகுறியாக, அதனைத்தீயிலிடவேண்டும்" என்று நாம் கூறுகிறோம்.

"அட,பாவிகளே! இராமாயணம் புண்யகதை அல்லவா? அதனையாகுறை கூறுவது! இராமனுடைய திருக்கல்யாண குணங்களைக்காட்டும் அந்தக்கதையையாகுறை கூறுகிறாய்? மகாபாபம் சம்பவிக்குமே!" என்று வைதிகஅன்பர்கள் நம்மைக்கண்டிக்கின்றனர்.

காந்தியார், சென்னையில் "இராமாயணக் கதையைப்படித்தால், நமக்கு இராமனுடைய செயலைப்பற்றிப்பல சந்தேகங்கள் உண்டாகும். உதாரணமா கச்சீதையை இராமன் காட்டுக்கு அனுப்பலாமா என்பனபோன்ற சந்தேகங்கள்வரும். ஆகையால், கதைகளை விட்டுவிட்டு, இராமநாமத்தைமட்டும்பஜிக்க வேண்டும். "கதையை நீக்கிவிட்டு, இராமனைமட்டும் எடுத்துக்கொள்ளவும்" என்று கூறினர்.

அதாவது, இராமாயணக்கதையில் கருத்துக்குஒவ்வாத, பகுத்தறிவுக்குப் பொருந்தாத பலவிஷயங்கள் உள்ளன. ஆகையால், அந்தக்கதையைக்கவனிக்க வேண்டியதில்லை, என்று காந்தியார் கருதுகிறார்.

நாம், அத்தகைய நூலைக்கண்டிக்கிறோம் என்பதன்அறிகுறியாகஅதனைத் தீயிலிடுக என்கிறோம். காந்தியார், அந்தக்காரியத்தையே, வேறு வகையில் செய்கிறார். நாம் அந்தக்கதையைக் கண்டிக்கிறோம், அவர் அந்தக்கதையைத் தள்ளிவிடச்சொல்கிறார்.

இதிலே இன்னொரு வேடிக்கை! கலாவாணர் சொல்கேட்டால், இராமாயணம் வேண்டும், இராமனைத் தெய்வமெனக் கொள்ளவேண்டியதில்லை. காந்தியார் கூறுவது கேட்டால், இராமன் வேண்டும், இராமாயணம் வேண்டியதில்லை. கலாவாணர் இராமனைக்கைவிடுகிறார்கள், காந்தியார் இராமாயணத்தைக்கைவிடுகிறார்! நாமோ, இராமாயணமும் வேண்டாம், இராமநாம பாராயணமும் வேண்டாம் என்கிறோம்.

இராமாயணத்தை இங்ஙனம் அலட்சியப்படுத்தி, அந்தக்கதையைப்படிக்க வேண்டுவதில்லை, படித்தால் பலசந்தேகங்கள் பிறக்குமென்று காந்தியார்கூறுகிறார்; பண்டிதரும், பாவாணரும், கலாரசிகரும், காவியப்பிரியரும், காந்தியாரின்வார்த்தையை மறுக்கும் துணிவுபெருது உள்ளனர்.

இதுகண்டு, "வீரன்," காந்தியாரின்கருத்து,கலாவாணர் நிலைமை, திராவிடரின்தீர்ப்பு என்பனவற்றைச் செய்யுள்வடிவிலே தொகுத்தனுப்பினன். செய்யுள், எந்தவகையிற் சேருமோ நாமறியோம். செய்யுள்அமைப்பைச்செப்பனிடக்கூடியவர்கள் செய்துகொள்ளட்டும், நாம் கருத்து விளங்கட்டும் என்று கருதிக்கவிதையைவெளியிடுகிறோம்.

வேதமொழியினரின் பேசவழி அதனைத்
தீதெனவே இயம்பும் தென்னவர்க்கு,
காதள்வேயாரும் கருத்தென் னும் கொள்கையினல்
காந்தி, மகரிஷியாய்க்காணவேவந்துசேர்ந்து
கதைஒதினர் மன்றுள்கண்ட பாதிமதியினரைநம்பி.

காடுபுகுவான் இராமன், கர்ப்பிணியைக்கைவிடுவான்!
நாடுபிடித்திடுவான் நம்பியை நமனுக்கி!
வெம்பியகனியினையும் விருந்தென்றே விளம்பிடுவான்
அரும்புமேபலஐயம், அக்கதையில் சிக்கல்பல.

ஆகையால் வால்மீகி, அருளும்நூலதனைத்
தாவியேபடித்து-மேவாதீர் இராமனிடம்,
ஆவிஅனையான்இராமன், அவன்கதையோ நாம்வேண்டோம்
கூவி அழைத்திடுவோம் குளிர்நாமம்!

இம்முறையில் இறங்கிடுவீர் இராமன்அருள்பெறுவீர்
இன்னுமுள தெய்வங்கள் எல்லாம்சரிசமமே
பொன்னுலகு புகுவதற்குப் போடுவீர்தாளமதை
கன்னல் மொழிக்கீதம் இதுகேட்டு.

காந்தியார் உரைசெய்த கவின்முறை இதுவாமே
காலமுழுதும்படித்துக் கலையின் இரசம்குடித்த
கவிவாணர்களே! கேண்மின்!
எரி என்றோம் ஏங்கிநின்றீர்
எரியிட்டார், கரியிட்டார், என்செய்தீரே!

கதைகூறக் கருத்தினிலே கறைஏறும்
கண்டறிந்த காந்தியார் கூறுவது அஃதன்றோ?
என்செய்வீர்? ஏந்தல்எதிர்மொழியும் கேட்பாரோ!
என்னுகும் உம்கதைகள் இனியும்?

இராமாயணமதனைப் பாராயணமே செய்யும்
ஜோரான பண்டிதர்காள்! செய்யுட்புலிகாள்!
சித்திரமே வரையும் சீரிளமைச்சிங்கங்காள்!
சேதுக்காள்! சிதம்பரங்காள்! சிந்துங்கால்
செந்நீரதாமோ உங்கள் கண்ணீர்!!

தொட்டாலும் துயர்நீக்கும்
மேல்பட்டாலும் பவம்போக்கும்
கொட்டாவி விட்டேனும் கூறும்கதைகேட்பின்
பட்டாபிராமன் பாலிப்பான் அருள்என்றீர்!
கட்டாவிடில்கடையை, காந்திஉரை மறுப்பீர்
மட்டானதோ உங்கள் மதியும்!

(அடுத்த பக்கம் பார்க்க)




உறையூர்

எஸ். எம். எஸ். ஆர். பி.

சொந்தக் கைத்தறி கலர்புடவைகள் & 3-அகலம் தோத்திகள், சரிகை அங்க வஸ்திரங்கள்.

100, 80-ந. நூலில் தயார் செய்யப்பட்டது. உத்திரவாதமுள்ள சாயம். உறுதியான—உடை, சுத்தமான—சரிகை, உயர்தரமான—ரகங்கள், நாணயமான விலைகள்.

S. M. S. R. பாலசுந்தரம்,
கைத்தறி ஜவுளி வியாபாரம்,
34, பஞ்சவர்ணஸ்வாமிகோவில் தெரு,
உறையூர் p. o. திருச்சி.


# ★ சின்னன் சினிமா பார்க்கிறன் ★

—●—

"சின்னனை,அழைத்துக்கொண்டு சினிமா போயிருந்தேன். பழைய புராணக்கதைதான், ஆனல் படம் புதிது.

"ஆமாங்க! இது எப்படிப் படமாக்கிக்காட்டுகிருங்க" என்று கேட்டான் சின்னன்.

"இவர்களெல்லாம் ஆடுவார்கள் ஒரு இடத்திலே வேஷம் போட்டுக்கொண்டு, அதைப் போட்டோ எடுக்கிறார்கள். அதுபோலவே சத்தத்தையும் சேர்த்து, வேறோர் மெஷின் மூலம் நமக்கெல்லாம் காட்டுகிறார்கள்" என்று நான் சொன்னேன்.

"என்னென்னமோ அதிசயமெல்லாம்நடக்குது இந்தநாளிலே" என்றுன் சின்னன். அந்தச்சமயத்திலே இராமருடைய பாததூளி பட்டுக் கல்வெடித்து அகலிகை வெளிப்பட்ட காட்சி நடந்தது. என்பக்கத்திலே இருந்த ஒருவர், சின்னனைச் சீண்டிவிட்டு, "அதிசயம் நடக்குது என்றுசொன்னயே அப்பா! இப்பதான் அதிசயம்னு நினைச்சுக்காதே.பார்த்தயேல்லோ, கல்லு வெடிச்சு அகலிகை வந்ததை, இது அந்த நாளிலே நடந்தது நம்ம நாட்டிலே;இது அதிசயமில்லையோ" என்று சொன்னர் வெற்றியுடன். பளீர் என்று பதில் சொன்னன் சின்னன், நானேதிடுக்கிடும்படி, "அதிசயம் சரிங்க!ஆனு அது சாமி இல்லவா செய்யுது, ஐயா சொல்ற அதிசயமெல்லாம், மனுஷனுங்க, நம்மைப்போலஇருக்கறவங்க இல்லவா செய்யருங்க. சாமி எதையும் செய்வாரு. மனுஷனும் செய்யருனே, அதுதானே அதிசயத்திலும் அதிசயமாக இருக்கு" என்றுன். சின்னனைச் சீண்டியவர்,வாயைமூடிக்கொண்டார்.

தேவலோகக்காட்சி நடந்தது, சின்னன்வாயைப்பிளந்துகொண்டு பார்த்துக்கொண்டிருந்தான். "ரொம்ப ஜோராக இருக்குதுங்க தேவலோகம்" என்று பூரிப்புடன் கூறினன். "இதைவிட ஜோரான செட்டிங்காட்டுவார்கள் சென்ட்ரல் ஸ்டுடியோபடத்திலே" என்று நான் சொன்னேன். "செட்டிங்களா?" என்றுகேட்டான்சின்னன். "தேவலோகம் போலே, ஜோடிச்சுத்தானே போட்டோ எடுக்கணும். அதனலே ஒரு சினிமாக்காரர் தேவலோகத்தைக் காட்டுவதுபோலவே இன்னொருசினிமாக்காரன் காட்டுவதில்லை. ஒவ்வொரு சினிமாக்காரருக்குள்ளே போட்டி ஏற்பட்டுத், தேவலோகம் வரவர ரொம்ப ஜோராகிவிட்டது" என்று நான்சொன்னேன்.

"ஒருசந்தேகங்களனக்கு. இவங்க இந்தத் தேவலோகம் கைலாசம் இதெல்லாம் படத்திலே காட்டுகிறுங்களே......................" என்றுசின்னன் இழுத்தான், எனக்குச்சிரிப்பு, "இந்த லோகத்துக்கெல்லாம்இவர்கள்போய்வந்தார்களாஎன்றுகேட்கறியா?" என்றேன், "நீங்க ஒரு வேடிக்கைக்காரருங்க!நான்என்ன அவ்வளவு முட்டாளா? அங்கேஎல்லாம் செத்தாதானே போகமுடியும்! அதுகூடவா எனக்குத் தெரியாது. நான் அதைக் கேட்கலே, தேவலோகம் இதெல்லாம்இப்படி இப்படி இருக்கும்னுஇவங்களுக்கு எப்படித்தெரிஞ்சுது? என்றுதான் கேட்க ஆசைப்பட்டேன்" என்றுன். "ஏன்! புத்தகத்திலே இருக்குதுவர்ணனை, அதுபோலவேஇவர்கள் ஜோடிக்கிறார்கள்" என்றேன் நான். சின்னன் திருப்தி அடையவில்லை. "புத்தகத்திலே இருக்குதுங்க, எனக்குக்கூடத்தான் அண்ணக்கி, காலட்சேபத்திலே ஐயரு சொன்னது கவனம் இருக்குது. புஸ்தகம் எழுதினவனுங்களுக்கு மட்டும் எப்படித் தெரிஞ்சுது" என்று கேட்டான்.

"என்னமோ தெரிந்ததுபோலத் தான் எழுதினர்கள்" என்றேன் நான். சின்னன் யோசனையிலேயே மூழ்கினன், 'என்ன யோசிக்கிறே சின்னன்!' என்று நான்கேட்டேன். "ஒண்ணுமில்லே,பார்க்காமேகொள்ளாமே எப்படிஇதை எல்லாம்இப்படி இப்படி இருக்குதுன்னுஎழுதுருங்கன்னு தான் யோசிச்சேன்" என்றுன். "எப்படிஎழுதின, யாரு சின்னன் அவர்களைக் கேட்கப் போறவங்க!இப்ப நாய்னுசொல்லி கன்றுக் குட்டியைப் படம்பிடிச்சிக்காட்டின, நீ, காரித்துப்புவே, ஏனென்றல், நீ நாயையும் பார்த்து இருக்கிறே, கன்றையும் பார்த்துஇருக்கிறே, தேவலோகம்னு சொல்லி, எந்தமாதிரி ஜோடிச்சுக் காட்டின என்ன? யாரு, இப்படியா தேவலோகம் இருப்பது, என்றுகேட்க முடியும், யாருஇருக்கருங்க அங்கே போய்வந்தவங்க. இருந்தாத்தானே போய்வர!" என்றேன் நான்.

"அதைச்சொல்லுங்க!சுத்தப்புளுவு, இந்தத்தேவலோகம்கைலாசம்அது இதன்னு எழுதிவைத்துகிட்டது" என்று சின்னன், சு.ம.பிரசாரமே செய்யத்தொடங்கினன்.

# கலாவாணர்பால் கருணை

கலாவாணர்களான என். எஸ். கிருஷ்ணன்—தியாகராஜபாகவதர் ஆகிய இருவரையும் கருணைகாட்டி விடுதலை செய்யுமாறு அரசாங்கத்தாரை வேண்டி, திருக்கோயிலூர் பஞ்சாயத்போர்டிலும், சேலம் அம்மாப்பேட்டை பஞ்சாயத் போர்டிலும், நீடாமங்கலம் பஞ்சாயத்போர்டிலும் தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளன.

# திராவிடத்தின்மீது பஞ்சம்படை எடுக்குமா?

## இன்றுள்ள மனதை மருட்டும் பிரச்னை இதுவே.

## "வங்கம்" இங்கும் வரக்கூடாது, உடனே நடவடிக்கை துவக்குக.

—[செழியன்]—

காலமழை வானில் தண்ணீரைக் கொப்பளிக்கிற நதிகளில் மங்கிய மணற்பட்டு.

வானத்தைஎதிர்நோக்கிப்பார்க்கிறான் உழவன் அவனுடையவறண்டபார்வையில் மருட்சி அதிகரிக்கிறது. வெடித்தவயல்—பஞ்சம்!

ஆ, பஞ்சமா?

ஆம்,பஞ்சம்.சென்னைமாகாணத்திலும், அதனைச்சார்ந்த சமவெளிப் பிரதேசத்திலும் உள்ள பலகோடி மக்களின்மேல்பஞ்சத்தின் இரும்புப்பிடி கவிந்துள்ளது, நெருங்கிக்கொண்டேயிருக்கிறது, அது குர்பொழுது தெரியும், பிதுங்குகிற கண்களையும், கொருங்குகிற ஜாப்புகளையும்.

பஞ்சம் என்றதும் தாதுவருஷப் பஞ்சமும் வங்கப் பஞ்சமுமே ஞாபகத்துக்குவரும். பசித்த மக்கள் பச்சைப்புல்லையும், இலைகழைகளையும் தின்று காலங்கழித்தன. வங்கப்பஞ்சத்தில்மக்கள்வங்கத்தைப் பட்டதைப்போல வேறெதுவும் நெரிக்கப்பட்டதில்லை. பஞ்சகாலத்தில் மனிதன்பட்டுமல்ல, அவனுடையமானமே அழிந்துவிடுகிறது. மனைவியை வெளியோட்டு கணவனும், மகளை ஒருவேளைச்சோறுக்கு விற்கும் தந்தையும், தங்கையைக் கடைவீதியில் விட்டோடும் தமையனும் பஞ்சகாலத்துஉற்பத்திகள். எரிக்கமுடியாதளவுக்குமிருந்து,நரியும், நாயும்குலைத்துச்சிதறியபிணங்கள் குவிக்கப்பட்ட வீதிகளும், பசி நோய்க்காற்றுது மற்றும்பலநோய்களுக்குத் தங்களை ஆளாக்கிக் கொண்டு, வெதும்பியஉளத்துடன் வாழும் மங்கையர்நிறைந்தவிபசார விடுதிகளும் பஞ்சத்தில் செழிப்புடன் வளருகின்றன, எண்ணிக்கையில்அதிகரிக்கின்றன.வங்கப்பஞ்சத்தில் 35இலட்சம்பேர் உணவின்றி—ஆம்!பாலும்தேனும்பாயும்நாட்டில் பசிக்கொடுமையால் இறந்தனர். பஞ்சம் ஒருகதம்பச்சரக்கு. பசிப் போராட்டம் நடை பெற்றுக் கொண்டிருக்கும்பொழுதே,நோய் மற்றொரு இடத்தில் மூண்டுவிடும். அதன்பின்னால் தொடர்ந்துஉள்ளே புகும் துன்பங்கள். பஞ்சத்திற்கு மறுஆண்டு வங்கத்தில் 12இலட்சம் பேர் தொத்துநோய்க்குப்பலியானார்கள். 60இலட்சம்பேர் வறுமைக்குழியில் வீழ்ந்தனர். ஏறத்தாழ நாலில்ஒருபங்கு வங்கம் சுடுகாடாகியது, வாழ்வுஇருண்டது.

உணவுக் கட்டுப்பாட்டுக்கடங்கிய நிலையில் சென்னை மாகாணத்தில்ஒவ்வொருவனும்குறைந்தஉணவுச் சத்தையே அடைந்து வருகிறான். இங்கிருக்கும் உணவுப் பொருள்களும், அதைப் பக்குவஞ் செய்யும் முறையும் சஞ்சலத்தைத் தருவன. மிகக்குறைந்த சத்துடைய அரிசியை நன்ருகக்கழுவி, அதைவடித்துமிகுந்தசாறைக்கஞ்சியாகப்பிழிந்து, சக்கையைத் தண்ணீரும்மிளகாயுமாகச் சாப்பிடுவது தான் சாப்பாடு என்று பெயர் சென்னை மாகாணத்தில். அதையும் உணவுக்கட்டுப்பாடு குறைத்தது. போருக்குமுன் ஒருவன் பெற்ற உணவுச்சக்தி 16-பங்கென்றால்,கட்டுப்பாடு முறை அவனுக்களிப்பது 11பங்குதான். அதற்குமேல்குறைக்கமுடியாது. குறைத்தால் வேலை செய்யும் சக்தியிருக்காது. எனவே இந்தக் குறுகிய அளவையும் குறைக்கும் அவலத்தைவிட்டு வெளியிலிருந்து உணவுப் பொருள்கள் கொண்டுவரவேண்டும்.

உலக சமாதானத்திற்காகப் போரிட்டுப்பயனென்ன? எகிப்துப் பாலைவனத்தில், அல்ஜிரியா மலைப் பிரதேசங்களில், இத்தாலியச் சமவெளிகளில் அவன் உருச்சிதைந்ததென்ன? பர்மா சதுப்பு நிலத்தில் சிங்கப்பூர் துறைமுகத்தில் போராடியதெல்லாம் உலுத்தர் உயரத்தானு? சமாதான அடிப்படைக்குத் திட்டம் வகுக்கவேண்டிய உணவு மகாநாட்டில் நேர்மை ஏன் இல்லை? ஆங்கில, அமெரிக்க முதலாளிகளுக்குக் கையாளாக இருப்பது மட்டும்அதன் குறிக்கோள்என்றால், அது ஒரு கம்பனி அளவில்நடபெறலாமேயொழியப் பல்வேறு நாடுமக்கள்வரவழைக்கப்பட்டிருக்கவேண்டியதில்லை.பிற்போக்குச் சக்திகளைப் பாதுகாக்க அது உபயோகப்படுத்தப்படுகிறது. நம்மைக்கட்டியாளுகிற வெள்ளையனுக்கு, உலகப்படத்தில் தன்இங்கிலாந்தைப்பார்க்கிலும் பலமடங்கு பெரிதான திராவிடத்தையும், அதனைச்சார்ந்துள்ள இந்திய உபகண்டத்தையும் ஒரேசிவப்பால்—சிவப்பு இரத்தத்தால் தீட்டத் தயங்காத வெள்ளை ஏகாதிபத்தியத்திற்கு அங்கே செல்வாக்கிருந்தும் திராவிடத்திற்கு நீதி ஏன் கிடைக்கவில்லை? இங்கிலாந்தில் ரொட்டிக்கு ரேஷன் கிடையாது, காவிரியும், வைகையும் பாயும்நாட்டில் பஞ்சத்திற்கு—இடமளிப்பதா? அதுமட்டுமல்ல (இங்கிலாந்து) நாட்டின்முக்கிய உணவுப் பொருள்களை நியாயமான விலைக்கு விற்கவும், எல்லோருக்கும் கிடைக்கும்படியான நிலையையும், அதற்காக அகிலஉலகத்தில் வர்த்தக ஒப்பந்தங்கள் செய்து கொள்ளத் தயாராக இருப்பதாகவும் மாட்சிமைதங்கிய மன்னர்பிரானின் அரசாங்கம், அங்கேகூறுகிறது. அதனுடைய நாவசைவில் நடமாடுகிற இந்திய அரசாங்கம் திராவிடத்தைச் சூழவிருக்கிற பஞ்சத்திற்குச் சமாதானத்தை யளிக்கத் தன்னைத் தயார்செய்து கொண்டிருக்கிறது. இதைக்குறிப்பிடும்வகையில், இந்தியப்பஞ்சம் பற்றிய கட்டுரையில் 'நியு யார்க்டைம்ஸ்' பத்திரிக்கை"ஐரோப்பாவில்எழுந்துள்ள குறைந்தஅளவுச்சிறுஉணவுக்குழப்பங்களைப் பற்றிக் கவலைப்படுகிற அமெரிக்கா உட்பட்ட வெளியுலகுக்கு இந்திய நிலைமை தெரியாது" என்று குற்றஞ்சாட்டுகிறது. எப்பொழுதும்போல் இதுவும் ஒருபஞ்சம் என்று எடுத்துக்கொள்ளக் கூடாதென்றும்அதுஎச்சரிக்கிறது.

இந்த நாட்டில் பஞ்சங்கள் உண்டாகவில்லை, உண்டாக்கப் படுகின்றன; ஏகாதிபத்தியமும், முதலாளித்தனமும் கைகுலுக்கும் நேரத்தில் பஞ்சம்உண்டாகிறது. அரசாங்கத்திற்கும்நல்லெண்ணமிருக்குமேயானல் கள்ளமார்க்கட்டை அடியோடுநசுக்கவேண்டும், கொள்ளைலாபத்தை ஒழிக்க வேண்டும், பாதாள அறைகளிலும்,கிடங்குகளிலும் தேவைக்கதிகப்பட்ட தானியம் மடித்து அழுகலெடுக்கும்வரை அடைத்துவைக்கும் பழக்கமொழிந்து உணவுக்கட்டுப்பாடு முழுஅமுலுக்கு வரவேண்டும்.

பஞ்சங்கள் உண்டாவதற்கான நிலை வரண்ட ஏரி, குளங்களிலிருந்தோ, தண்ணீர்குறைந்தமேட்டூர் தேக்கத்திலிருந்தோ வரவேண்டியதில்லை. சமூக அமைப்பிலேயே பொதிந்துகிடக்கிறது. உணவுப்பயிரிடுபவர்களைவரும் இந்தநாட்டுச் சமூகப் பொருளாதார அரசியல் நிலைகளில் ஒதுக்கப்பட்டவர்கள், சேரிகளில்வாழ்பவர்கள்,தீண்டாதவனெனவெறுக்கப்பட்டு, ஆடுமாடுகளைப்போல உழைப்பதற்கென ஒதுக்கப்பட்ட இனம். சமூகத்திலிருந்து—வாழ்விலிருந்து தள்ளப்பட்டஉழவர்கூட்டம்.தலைக்குமேல் தாண்டியகடன்பளுவில் ஆண்டையிடம் அடிமைப்பட்டு, ஆண்டு முழுவதும் உழைத்துப் பொறுக்கிய மணிகளைப் பண்ணையின் கோட்டைகளில் சேர்த்துவிட்டு, வறுமைவாழ்வில் உழலுகிற உழவர்களைத்தான் பஞ்சம் முதலில் தாக்கும். இவர்கள் சரிந்துவிழுந்தால், அதற்குப்பின் எவ்வளவுமழைபெய்தாலும்சரி, வரண்டநிலம் வளமாவதில்லை. பஞ்சத்தைத் தொடர்ந்து வரும் தொத்துநோய்,மலைவி, மக்கள், ஆடு, மாடு எல்லாவற்றையும் அடித்துக்கொண்டு போய்விடும். விளைவு குறைவு என்ற அறிகுறிகள் தென்படும் பொழுது விற்பனைக்கு வரவேண்டிய தானியங்கள் முடக்கப்பட்டு கள்ளமார்க்கட்டுக்குச் சென்றுவிடும். அந்தநிலையில் பணம் மிகுந்தவர்களுடன் போட்டியிட வண்டியிழுக்கும் வாதனலேயோ, ஏற்றம் இறைக்கும்மருதையாலோ உழுதுவிதைக்கிறவீராசாமியாலோ முடியுமா? சோர்ந்தஉள்ளத்தினன் சோர்ந்துவிடுகிறான். விளைவு முற்றிலும் நின்றுவிடுகிறது. இதற்கிடையில் ஆடுமாடுகள்இறப்பு. முடிவில் மிதந்திருக்கும் சிறுதான்யங்கள், தங்கமணிகளாகக் கழுகுக்கூட்டத்தினர் கையில் மாறுகிறது.

இதனால்தான் பஞ்சத்தை ஒழிப்பதற்கானமுறைகளில்உழவனுக்கு முதலிடம் கொடுக்கவேண்டும். அவன்தான் உடனடியாகப்பஞ்சத்தைத்தடுப்பவன்மட்டுமல்ல, பஞ்சத்தை ஒழிப்பதற்கான விளைவைச் செய்பவன். அவன்கை ஓங்கியிருந்தால்தான் நாட்டின்நிலை ஓங்கும். அந்தவகையில்செய்ய,உழைப்பாளிகளின் உலகம் ஒன்றில்தான் முழு வெற்றியைக்காண முடியும். அதுவரை?

திராவிடத்தைப் பஞ்சம் சூழ்ந்துள்ளது. படைக்கலங்களைப் பளபளப்பாக்கும் நேரமல்ல,கிடைத்ததைக்கொண்டு போராடும் நிலை. உணவுப்பொருள்களை விநியோகிக்கும் முக்கியபகுதிகள் மக்கள் கைக்கு வருவதற்காகப் போராடவேண்டும். ஆங்காங்கு உணவுக்கழகங்கள் அமைத்து, முன்னேற்றச் சக்திகளுடன் ஒன்று சேர்ந்துஉணவுக்கட்டுப்பாட்டில் ஊழல் நடைபெருவண்ணம் பாதுகாக்கவேண்டும். மக்களுக்குப்பயன்படும்விதத்தில், மக்களுடைய பொதுஉணவுக் கழகங்களின் கைக்கு உணவுவிற்பனை—வாங்கல்முறை மாற்றப்படவேண்டும். தேவைக் கதிகமான உணவுத்தான்யங்கள் நியாயமான விலைக்கு வாங்கப்பட்டுக், கட்டுப்பாட்டுடன் இல்லாதவர்களுக்கு இலாபம் கருதாதவகையில்கொடுக்கப்படவேண்டும்.

இராமனேபோதும் அவன் அயனமும்வேண்டாம்
ஐயமேபிறந்துநம்மை அலைக்கழிக்குமே அதனல்
செய்யவேவேண்டுவது ஜே! ஜே! என்றேகூவி
ஐயனைஅழைத்திடலே அழகென்றார் அண்ணல்
பொய்யுமேயானதே உம்போர்த்திறமும் ஆத்திரமும்
கையுமே போயினதோ சிலைமேல்!

தீயிடுதல்அன்றோ? அச்சொல்தித்திக்குதோ? நன்றோ?
வாயிடுதலையும்உண்டோ?வழிஉண்டோ?வகையும்உண்டோ?
காகிடுவதற்குதவாக் கதைஎன்றுமே யன்றோ
காந்தியார்கழறிநின்றார், காதுமே உண்டேகொண்டும்
கழலடிதொழுவோராகி விழலிடை நீருமானீர்
வியப்பிது அன்றோ! வேறும்உண்டோ?

இராமன் ஒருதேவனென்று ஏன்கொண்டுவாதிடுநீர்?
இரசித்திடுநல்கதைஎன்றே ஏற்றிடுவீர் நாட்டினரே!
பாட்டுமொழிச்சுவைஅதிகம், பண்புமிகு கலைஉயர்வு
நாற்றமுளநறும்பூங்கா, நண்ணுவீர் இனிதேஎன்றீர்!

பூங்காவில்பாம்புண்டு புகவேண்டாம் ஆங்கதனுள்
பாங்காகஅவன்நாமம் பஜித்திடலே பண்பென்றார்
ஏங்காணம்! எவர்உரையின் வழிநிற்பர்?
எவருரையில் இதம் காண்பர்?
ஏதுக்கோ இந்த ஏறுமாறும்!

தூங்காத தமிழர்சிலர் தூண்டியேவிட்டதனல்
தொடர்ந்தேகாணும், தூயபகுத்தறி வொளியும்
தூரமே தெரிந்துவிட, துதிபாடகரும்
தூவியேசென்றார்பதரை ஒருவாவியும் இல்லாவயலில்!
சாவியே ஆகுமென்று, சாற்று!!

குறிப்பு:—

நம்பியைநமனுக்கி=விபீஷணனை இராவணனுக்கு விரோதியாக்கி
வெம்பியகனி=அகலிகை
விருந்தாம்என்றார்=கௌதமர் (அகலிகையை) ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கூறினர்.
பாதிமதியினர்=அரைகுறை அறிவுள்ளவர்கள்.

★

### மதுரை

கருப்புச்சட்டைப்படையின் நிர்வாகக் குழுக்கூட்டம் 27-1-46ல் தோழர் சே. எஸ். ராசமான் அவர்கள் தலைமையில் நடந்தது. அது போது"கருப்புச் சட்டைப்படை" மாகாண மாநாட்டை மதுரையில் நடந்தத்தலைவர்கள் அனுமதியைக் கோருகிறதென்று தீர்மானித்தது.

Edited Printed and Published by C. N Annadurai M.A., at "Dravida Nadu" Press. 317—319 Hodgsonpet, Conjeeveram.